www.penakural.com
மலர்: 03 இதழ்: 07 மே 2025 Vol.: 03 Issue: 07 May 2025 ₹ 20/-

# பேனா குரல்
# PENA KURAL

RNI No.:
TNTAM / 2022 / 85375
தமிழ் மாத இதழ்

Scan and visit the website




## பாகிஸ்தான் தீவிரவாதிகளை எதிர்த்து நடத்திய தாக்குதல் பற்றி

# பெண் அதிகாரிகள் விளக்கம் தந்ததற்கான காரணம் என்ன?



VANNIYAR SANGAM
வன்னியர் சங்கம்
மே 11ல்
வன்னியர் இளைஞர்
பெருவிழா மாநாடு
இடம்: மாமல்லபுரம்
சமூக நீதி காவலர்
மருத்துவர் அய்யா
பா.ம.க தலைவர்
மருத்துவர் அன்புமணி
அவர்கள் அழைக்கிறார்....
வாரீர்! வாரீர்!!
துரை. சந்துரு
பகுதி செயலாளர் – சோழிங்கநல்லூர்

# பேனா குரல்

**PENA KURAL** தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 03 இதழ்: 07 மே 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு
வெளியிடுபவர் : **நா வீ சிவசங்கர்**
ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,
சிறப்பு ஆசிரியர் : **M. ஸ்ரீராம்**
கௌரவ ஆசிரியர் : **K. ராமசுப்ரமணியன்**
இணை ஆசிரியர் : **K. ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், வீ.அய்யனார், P.ஸ்டாலின், P.கார்த்திகேயன், S.மோகன்**

தலைமை நிருபர்கள்:
**R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், B.நவின்குமார், L.குமரேசன், H.காஞ்சன், சங்கரன்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், S.ஜெயராஜ், K.மாரிதுரை, A.சரவணன்**

புகைப்பட நிருபர்கள்: **V.கவியரசன், கபில்**
ஓவியம் & புகைப்பட நிருபர்: **V.சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L., Government of India, Central Government Additional Standing Counsel
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123



நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, மற்றும் விளம்பரங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *




# விமர்சிப்பவர்கள் தேசத்தின் மீதான உண்மையான அக்கறை கொண்டவர்களா?

'ஆபரேஷன் சிந்தூர்' இடைக்கால மோதல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றாலும், இரு தரப்பும் தங்களது ராணுவத்தை மோதலில் இருந்து விலக்கிக் கொண்டிருக்கின்றன. ஒட்டுமொத்த நாடுகளும், குறிப்பாக, தெற்காசியா சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது. இந்தியா ராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கிய 88 மணி நேரத்துக்குப் பிறகு, இரு தரப்பு சம்மதத்துடன் இடைக்கால மோதல் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியத் தாக்குதலில், பாகிஸ்தானின் 24 முக்கியமான பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன; பாகிஸ்தானின் ரஃபீகி, முரித், சக்லாலா, ரஹிம்யார்கான், சுக்குர், சுனியான் என்கிற ஆறு விமானப்படைத் தளங்களில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி, மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தி இருக்கிறது இந்திய விமானப் படை. நிலம் வழித் தாக்குதல் மட்டுமல்ல, இந்தியாவால் வான்வெளித் தாக்குதலும் நடத்த முடியும் என்பதை இதன்மூலம் பாகிஸ்தான் உணர்ந்து கொண்டது. எந்தவிதமான தாக்குதல்களையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக உள்ளது என்பது மட்டுமல்ல பாகிஸ்தானுக்கு நாம் விடுத்த எச்சரிக்கை. எந்தவிதத்திலான பயங்கரவாதத் தாக்குதலும் இனிமேல் போராகக் கருதப்பட்டு, ராணுவ ரீதியில் எதிர்வினை ஆற்றப்படும் என்பதும்கூட பாகிஸ்தானுக்கு உணர்த்தப்பட்டது. இந்தியாவின் தன்மானத்தையும், துணிவையும் பாகிஸ்தான் இனிமேலும் சோதித்துப் பார்க்க முடியாது.

**பாகிஸ்தானின் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது;** ட்ரோன்கள் வான்வெளியிலேயே தகர்க்கப்பட்டன; அடுத்த பல மாதங்களுக்கு செயல்பட முடியாத நிலைக்குப் பல விமானப்படைத் தளங்கள் தகர்க்கப்பட்டன; அந்த நிலையில் பாகிஸ்தானுக்கு இரண்டு வழிகள்தான் இருந்தன - ஒன்று சரணாகதி; இரண்டு வேறு வழியில்லாமல் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவோம் என்கிற அச்சுறுத்தல்.

அதிபர் டொனால்ட் டிரம்ப் மட்டுமல்ல, உலகில் உள்ள எல்லா நாடுகளின் கவனத்தையும் இந்தியா-பாகிஸ்தான் மோதல் ஈர்த்ததற்கு அதுதான் காரணமாக இருந்திருக்கும். பாகிஸ்தானின் கையில் அணு ஆயுதம் என்பது குரங்கு கையில் கிடைத்திருக்கும் பூமாலை என்பது உலக நாடுகளுக்குத் தெரியாததல்ல. நேபாளமும், வங்கதேசமும் "இடைக்கால மோதல் நிறுத்தத்தை' வரவேற்றது என்றால், அணு ஆயுதப் பயன்பாடு தடுக்கப்பட்டது என்கிற ஆறுதல்தான் காரணம்.

இனியும் அணு ஆயுததத்தின்பேரிலான அச்சுறுத்தலை (பிளாக்மெயில்) இந்தியா சகித்துக் கொண்டிருக்காது என்கிற பிரதமரின் ஆணித்தரமான கருத்து, பாகிஸ்தான் உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து சமரசத்துக்கு வழி கோலியது என்பதை உறுதிப்படுத்துகிறது.

இடைக்கால மோதல் நிறுத்தத்தை விமர்சிக்கின்றவர்கள் விவரம் இல்லாதவர்கள். போரில் ஏற்படும் உயிர்ச் சேதம் குறித்தும், பொருளாதாரப் பின்னடைவுகள் குறித்தும் கவலைப்படாதவர்கள். முன்னாள் ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவணே கூறியிருப்பதுபோல, போர் என்பது திரைப்படப் பொழுதுபோக்கல்ல. கடைசியாக எடுக்க வேண்டிய நிலைப்பாடு. 1999 கார்கில் யுத்தம் ஏற்படுத்திய இழப்பு ரூ.1,500 கோடி என்றால் இப்போது எவ்வளவு என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

**– ஆசிரியர்**

# ஆதம்பூர் விமானப்படை தளத்தில் பிரதமர் மோடி;
# வீரர்களுடன் கலந்துரையாடல்!



பாரத் மாதா கி ஜெய்!

இந்த முழக்கத்தின் சக்தியை உலகம் தற்போதுதான் கண்டிருக்கிறது. பாரத் மாதா கி ஜெய் என்பது வெறும் முழக்கம் அல்ல, பாரத தாயின் கௌரவம் மற்றும் கண்ணியத்திற்காக தமது உயிரைப் பணயம் வைக்கும் நாட்டின் ஒவ்வொரு ராணுவ வீரரின் சபதமாகும். நாட்டிற்காக வாழ விரும்பும், ஏதாவது சாதிக்க விரும்பும் நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் குரல் இது. நமது ட்ரோன்கள் எதிரியின் கோட்டையின் சுவர்களை அழிக்கும்போது, நமது ஏவுகணைகள் ஒரு சத்தத்துடன் இலக்கை அடையும்போது, எதிரி கேட்கிறான் – பாரத் மாதா கி ஜெய்! நமது படைகள் அணு ஆயுத அச்சுறுத்தலை முறியடிக்கும் போது, வானத்திலிருந்து உலகம் வரைக்கும் ஒரே ஒரு முழக்கம் மட்டுமே எதிரொலிக்கிறது – பாரத் மாதா கி ஜெய்!

நண்பர்களே,

உண்மையில், நீங்கள் அனைவரும் லட்சக்கணக்கான இந்தியர்களை பெருமைப்படுத்தியுள்ளீர்கள், ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்படுத்தியுள்ளீர்கள். நீங்கள் வரலாற்றை உருவாக்கியுள்ளீர்கள். உங்களைப் பார்க்க காலையிலேயே நான் இங்கு வந்துள்ளேன். துணிச்சலானவர்களின் கால்கள் பூமியில் விழும்போது, பூமி ஆசீர்வதிக்கப்படுகிறது, துணிச்சலானவர்களைக் காண ஒரு வாய்ப்பு கிடைக்கும்போது, வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படுகிறது. அதனால்தான் உங்களைப் பார்க்க நான் இங்கு வந்துள்ளேன். தற்போது முதல் பல ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தியாவின் இந்த வீரம் பற்றி விவாதிக்கப்படும்போது, அதன் மிக முக்கியமான அத்தியாயம் நீங்களும் உங்கள் நண்பர்களும் தான். நீங்கள் அனைவரும் நிகழ்காலத்திற்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் ஒரு புதிய உத்வேகமாக மாறிவிட்டீர்கள். இந்த மாவீரர்களின் பூமியிலிருந்து, இன்று நான் விமானப்படை, கடற்படை மற்றும்



இராணுவத்தின் அனைத்து துணிச்சலான வீரர்களுக்கும், எல்லைப் பாதுகாப்புப் படையின் நமது துணிச்சலான வீரர்களுக்கும் வணக்கம் செலுத்துகிறேன். உங்கள் வீரத்தின் காரணமாக, ஆபரேஷன் சிந்தூரின் எதிரொலி ஒவ்வொரு பகுதியிலும் கேட்கப்படுகிறது. இந்த முழு நடவடிக்கையிலும், ஒவ்வொரு இந்தியரும் உங்களுடன் நின்றார்கள், ஒவ்வொரு இந்தியரின் பிரார்த்தனையும் உங்களுக்காக செய்யப்படுகிறது. தற்போது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அதன் வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நன்றியுள்ளவர்களாகவும், அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

நண்பர்களே,

நீங்கள் அவர்களை முன்பக்கத்திலிருந்து தாக்கி கொன்றீர்கள், பயங்கரவாதத்தின் அனைத்து பெரிய தளங்களையும் அழித்தீர்கள், 9 பயங்கரவாத மறைவிடங்கள் அழிக்கப்பட்டன, 100 க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர், பயங்கரவாதத்தின் எஜமானர்கள் தற்போது இந்தியாவை நோக்கி கண் வைத்தால் ஒரே ஒரு விளைவு மட்டுமே இருக்கும் என்பதை புரிந்துகொண்டுள்ளனர் -அது அழிவு என்பதாகும்! இந்தியாவில் அப்பாவி மக்களின் இரத்தம் சிந்தினால் ஒரே ஒரு விளைவு மட்டுமே இருக்கும் ῟ அது இழப்பு மற்றும் பெரும் பேரிழப்பாக அமையும் என்பதாகும்

என் துணிச்சல்மிக்க நண்பர்களே,

ஆபரேஷன் சிந்தூர் மூலம், நீங்கள் நாட்டின் தன்னம்பிக்கையை உயர்த்தியுள்ளீர்கள், நாட்டின் ஒற்றுமையை கட்டமைத்துள்ளீர்கள், மேலும் இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாத்துள்ளீர்கள், இந்தியாவின் சுயமரியாதைக்கு புதிய உச்சத்தை அளித்துள்ளீர்கள்.

நண்பர்களே,

நீங்கள் முன்னெப்போதும் இல்லாத, கற்பனை செய்ய முடியாத, அற்புதமான ஒன்றைச் செய்தீர்கள். பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத தளங்களை நமது விமானப்படை குறிவைத்தது. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு தொழில்முறை படையால் மட்டுமே இதைச் செய்ய முடியும், எல்லையைத் தாண்டிய இலக்குகளை ஊடுருவி, 20-25 நிமிடங்களுக்குள் துல்லியமான இலக்குகளைத் தாக்கினீர்கள். உங்கள் வேகமும் துல்லியமும் எதிரியை அதிர்ச்சிக்குள்ளாக்கும் அளவுக்கு மேம்பட்டதால், அவர்களது இதயம் எப்போது துளைக்கப்பட்டது என்பதை அவர்கள் கூட உணரவில்லை.

நண்பர்களே,

பாகிஸ்தானுக்குள் இருக்கும் பயங்கரவாதத் தலைமையகத்தைத் தாக்கி, பயங்கரவாதிகளைத் தாக்குவதே எங்கள் இலக்கு. ஆனால், பாகிஸ்தான் தனது பயணிகள் விமானங்களைப் பயன்படுத்தித் தீட்டிய சதி பற்றி கூற வேண்டும். பொதுமக்கள் விமானம் பறக்கும் தருணம் எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது, மேலும் நீங்கள் மிகவும் கவனமாக, மிகவும் எச்சரிக்கையுடன் பொதுமக்கள் விமானங்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இலக்குகளை அழித்ததில் நான் பெருமைப்படுகிறேன், நீங்கள் பொருத்தமான பதிலடி கொடுத்தீர்கள். நீங்கள் அனைவரும் உங்கள் இலக்குகளை அடைந்துவிட்டீர்கள் என்று நான் பெருமையுடன் சொல்ல முடியும்.

நண்பர்களே,

சிந்தூர் நடவடிக்கையால் விரக்தியடைந்த

எதிரி, இந்த விமானப்படை தளத்தையும், நமது பல விமானப்படை தளங்களையும் தாக்க பல முறை முயன்றார். அது மீண்டும் மீண்டும் எங்களை குறிவைத்தது, ஆனால் பாகிஸ்தானின் தீய நோக்கங்கள் ஒவ்வொரு முறையும் தோல்வியடைந்தன. பாகிஸ்தானின் ட்ரோன்கள், அதன் ஹிகிக்ஷிகள், பாகிஸ்தானின் விமானங்கள் மற்றும் அதன் ஏவுகணைகள் அனைத்தும் நமது வலுவான வான் பாதுகாப்பின்னால் அழிக்கப்பட்டன. நாட்டின் அனைத்து விமானப்படை தளங்களுடனும் தொடர்புடைய தலைமையை நான் மனதாரப் பாராட்டுகிறேன், இந்திய விமானப்படையின் ஒவ்வொரு விமானப்படை வீரரும், நீங்கள் உண்மையிலேயே மிகச் சிறந்த பணியைச் செய்துள்ளீர்கள்.

நண்பர்களே,

சிந்தூர் நடவடிக்கையின் ஒவ்வொரு தருணமும் இந்தியப் படைகளின் வலிமைக்கு சாட்சியமளிக்கிறது. இந்த நேரத்தில், நமது படைகளின் ஒருங்கிணைப்பு சிறப்பாக இருந்தது. அது இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை எதுவாக இருந்தாலும், அனைத்தின் ஒருங்கிணைப்பும் மிகப்பெரியதாக இருந்தது. கடற்படை கடலில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. இராணுவம் எல்லையை வலுப்படுத்தியது. மேலும் இந்திய விமானப்படை தாக்கியதுடன், தற்காப்பும் செய்தது. எல்லைப் பாதுகாப்பு படை மற்றும் பிற படைகளும் அற்புதமான திறன்களை வெளிப்படுத்தியுள்ளன. ஒருங்கிணைந்த வான் மற்றும் தரைவழி போர் அமைப்புகள் சிறந்த பணியைச் செய்துள்ளன

நண்பர்களே,

சிந்தூர் நடவடிக்கையில், மனிதவளத்துடன், இயந்திரங்களின் ஒருங்கிணைப்பும் அற்புதமானது. பல போர்களைக் கண்ட இந்தியாவின் பாரம்பரிய வான் பாதுகாப்பு அமைப்புகளாக இருந்தாலும் சரி, அல்லது ஆகாஷ் போன்ற நமது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தளங்களாக இருந்தாலும் சரி, எஸ்-400 போன்ற நவீன மற்றும் வலுவான பாதுகாப்பு அமைப்புகள் அவற்றிற்கு முன்னெப்போதும் இல்லாத பலத்தை அளித்துள்ளன. ஒரு வலுவான பாதுகாப்பு கவசம் இந்தியாவின் அடையாளமாக மாறியுள்ளது. பாகிஸ்தானின் பல முயற்சிகள் இருந்தபோதிலும், நமது விமான தளங்கள் அல்லது நமது பிற பாதுகாப்பு உள்கட்டமைப்புகள் பாதிக்கப்படவில்லை. இதற்கான பெருமை உங்கள் அனைவருக்கும் சேரும், மேலும் உங்கள் அனைவரையும் நினைத்து நான் பெருமைப்படுகிறேன், எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு வீரரும், இந்த நடவடிக்கையுடன் தொடர்புடைய ஒவ்வொரு நபரும் இதற்காகப் பாராட்டப்பட வேண்டும்.

நண்பர்களே,

தற்போது பாகிஸ்தான் நம்முடன் போட்டி-யிட முடியாத புதிய மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்தின் திறன் நம்மிடம் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், விமானப்படை உட்பட நமது அனைத்துப் படைகளும் உலகின் சிறந்த தொழில்நுட்பத்தைப் பெற்றுள்ளன. இந்திய விமானப்படை தற்போது எதிரியை ஆயுதங்களால் மட்டுமல்ல, தரவுகள் மற்றும் ட்ரோன்கள் மூலமும் தோற்கடிப்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

நண்பர்களே,

பாகிஸ்தானின் வேண்டுகோளுக்குப் பிறகுதான் இந்தியா தனது இராணுவ நடவடிக்கையை நிறுத்தி வைத்துள்ளது. பாகிஸ்தான் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகளையோ அல்லது இராணுவத் துணிச்சலையோ காட்டினால், அதற்கு நாங்கள் தகுந்த பதிலடி கொடுப்போம். நாம் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும், நாம் தயாராக இருக்க வேண்டும். இது ஒரு புதிய இந்தியா என்பதை எதிரிக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த இந்தியா அமைதியை விரும்புகிறது, ஆனால், மனித சமுதாயம் தாக்கப்பட்டால், போர்முனையில் எதிரியை எவ்வாறு அழிப்பது என்பதையும் இந்த இந்தியா நன்கு அறிந்திருக்கிறது. இந்த உறுதியுடன், மீண்டும் ஒருமுறை கூறுவோம்

பாரத் மாதா கி ஜெய்.

- M. திலிப் குமார்

# இந்தியாவுக்கு சாதிவாரி கணக்கெடுப்பு ஏன் முக்கியம்?

"மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்" பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவை கூட்டத்திற்கு பின் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்த முக்கிய தகவல் இது.

**இந்திய அளவில் அமலுக்கு வந்த இட ஒதுக்கீடு:** 1979ல் அமைக்கப்பட்ட மண்டல் கமிஷன், 1980ஆம் ஆண்டு அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால், தொடர்ந்து அது கிடப்பில் போடப்பட்டு, 1991ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் வி.பி.சிங் மண்டல் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில், நாடு முழுக்க இட ஒதுக்கீட்டை அமல்படுத்தினார். இது இடஒதுக்கீட்டில் முக்கிய நிகழ்வாக இருக்கிறது.

**இந்தியாவில் முதல் சாதிவாரி கணக்கெடுப்பு:** இந்திய விடுதலைக்கு முன்பு 1931ஆம் ஆண்டு முதல் முறையாக மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. அதன்பின் 1941ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகையில் இருந்து சாதிவாரி கணக்கெடுப்பு கைவிடப்பட்டது. இதற்கு இரண்டாம் உலகப் போர் உட்பட பல காரணங்கள் சொல்லப்படுகிறது. ஆனால், 1931ல் எடுக்கப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பே தற்போதுவரையிலான இறுதி சாதிவாரி கணக்கெடுப்பாக இருக்கிறது.

**2011ல் எழுந்த சிக்கல்:** சாதிவாரி கணக்கெடுப்புக் கோரி தொடர்ந்து பல காலக்கட்டங்களில் பலரும் வலியுறுத்திவர 2011ஆம் ஆண்டு நடந்த 15ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு, சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பை மேற்கொண்டது. ஆனால், மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம் 1948ன் கீழ் மேற்கொள்ளப்படுவதால், தனி நபரின் தனிப்பட்ட தகவல்களை அரசு ரகசியமாக வைத்திருக்க வேண்டும். இதன் காரணமாக அது பொதுவெளியில் வெளியிடப்படாமல் வைக்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு முறையான சாதிவாரி கணக்கெடுப்பிற்கு பிறகு 2025ஆம் ஆண்டு மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்போடு சேர்த்து, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என 94 ஆண்டுகளுக்கு பிறகு அறிவித்துள்ளது.




**இந்தியாவிற்கு சாதிவாரி கணக்கெடுப்பு ஏன் முக்கியம்?** இந்தியாவின் பல பகுதிகளில் சாதி அடிப்படையிலான பாகுபாடு இன்னும் உள்ளது. இதனால், பல சமூகத்தினரும் சமூகம், பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் உள்ளிட்டவற்றில் பின் தங்கியுள்ளனர். அவர்களுக்கான வளர்ச்சியை உறுதிபடுத்தவும், அவர்களுக்கான அரசு திட்டங்களை வடிவமைக்கவும் சாதிவாரி கணக்கெடுப்பு அவசியமாகிறது.

பல தலைமுறைகளாக அனைத்திலும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பல சமூகத்தினருக்கும், சம வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அடிப்படை தேவையாக சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை என்பதே பல அரசியல் கட்சிகளின் குரலாக இருந்துவருகிறது. காரணம், எந்தச் சமூகத்தினர் எந்த அளவில் இருக்கின்றனர், அவர்களுக்கான வாய்ப்பு எந்த அளவிற்கு இருக்கிறது, அவர்கள் இன்னும் எந்த அளவிற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும் என அனைத்தும் இந்தச் சாதிவாரி கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே தெரியவரும்.

- D. ராஜேஷ்




பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பதிலடி கொடுத்துள்ளது இந்திய ராணுவம்.

இந்தத் தாக்குதலில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

ஜெய்ஷ்-இ-முகம்மது அமைப்பின் 4 இலக்குகள், லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் 3 இலக்குகள் மற்றும் ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பின் 2 இலக்குகள் என 9 பயங்கரவாத முகாம்கள் தகர்க்கப்பட்டன. பாகிஸ்தான் ராணுவத் தளவாடங்கள் மீது எந்தவிதத் தாக்குதலையும் நடத்தவில்லை. பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றது இந்திய ராணுவம்.

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தி முடித்த இந்திய ராணுவத்துக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

இதனிடையே ஆபரேஷன் சிந்தூர் வெற்றிகரமாக நடத்தப்பட்டது எப்படி? தகர்க்கப்பட்ட இடங்கள் என்னென்ன? என்பதை வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரியுடன் ராணுவத்தின் கர்னல் சோபியா குரேஷி, விமானப் படையின் விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் விளக்கினர்.

இந்தத் தாக்குதல் குறித்து இரு பெண் அதிகாரிகள் விளக்கியது ஏன்? என்ற கேள்விக்கு பஹல்காம் தாக்குதலின்போது நடந்த சம்பவமே பதிலாக கூறப்படுகிறது. பஹல்காமில் மனைவி முன்பு கணவரைக் கொன்ற பயங்கரவாதிகள், “பெண்களைக் கொல்லமாட்டோம்; இதனை உங்கள் பிரதமரிடம் சொல்லுங்கள்” எனக் கூறினர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பெண் அதிகாரிகளைக் கொண்டே ஆபரேஷன் சிந்தூர் குறித்து விளக்கம் அளித்ததாகக் கூறப்படுகிறது.

**கர்னல் சோபியா குரேஷி**

ஆசிரியர் பணியை விடுத்து ராணுவத்தில் இணைந்தவர் ராணுவப் படை கர்னல் சோபியா குரேஷி.

குஜராத் மாநிலம் வதோதராவைச் சேர்ந்தவர் சோபியா. இவரின் தந்தையும், தாத்தாவும் இந்திய ராணுவத்தில் பணியாற்றியுள்ளனர். இவர்களை உத்வேகமாகக் கொண்டே தன்னுடைய பி.எச்டி.,-யை துறந்து ராணுவத்தில் சேர்ந்துள்ளார். இவரின் கணவரும் ராணுவத்தில் பணிபுரிபவரே.

பன்னாட்டு ராணுவப் பயிற்சியில் இந்திய ராணுவப் படைக்குத் தலைமை தாங்கிய முதல் பெண் அதிகாரி என்ற பெருமைக்குரிய சோபியா, 2006 ஆம் ஆண்டு காங்கோவில் நடைபெற்ற ஐ.நா. அமைதிப் படையில் இந்தியாவின் பிரதிநிதியாகவும் பங்கேற்றார்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற போர்ஸ் 18 கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்திய படையை சோபியா வழிநடத்தினார்.

முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்,




நாட்டின் நலனே முக்கியம் என எண்ணி ராணுவத்தில் இணைந்துள்ளார் இப்பெண்மணி.

**வியோமிகா சிங்**

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக விளக்கமளித்த மற்றொரு பெண் அதிகாரி வியோமிகா சிங். குழந்தைப் பருவம் முதலே வானில் பறப்பதை கனவாகக் கொண்டவர்.

வியோமிகா என்பதன் பொருள் வானத்தில் வாழ்பவள். தனது பெயராலேயே ஈர்க்கப்பட்ட அவர், வானத்தில் பறக்க வேண்டும் என்பதை கனவாக வளர்த்துக் கொண்டார். பள்ளியில் என்.சி.சி.யில் ஈடுபாட்டுடன் செயல்பட்ட இவர், தமது குடும்பத்தில் இருந்து ராணுவத்தில் சேர்ந்த முதல் (பெண்) நபராவார்.

கல்லூரியில் பொறியியல் படிப்பைத் தேர்வு செய்தது, அவருக்கு விமானி ஆவதற்கு உதவியாக அமைந்தது.

2019 ஆம் ஆண்டு விமானப் படையின் ஹெலிகாப்டர் விமானியாக இணைந்த வியோமிகா, வானில் 2,500க்கும் அதிகமான மணி நேரம் பறந்து சாதனை படைத்துள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் தொடங்கி இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள சவாலான நிலப்பரப்புகளில் ஹெலிகாப்டர்களை திறம்பட இயக்கிய பெருமைக்குரியவர்.

2020 ஆம் ஆண்டு அருணாசலில் ஏற்பட்ட பனிப்பொழிவு மற்றும் வெள்ள காலத்தில் மக்களை மீட்கும் பணியில் முக்கிய பங்காற்றியவர்.

- N.V. **சிவசங்கர்**

# திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் தலைமையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு




திருப்பத்தூர் மாவட்டம் எலவம்பட்டி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கடந்த ஏப்ரல் 29 செவ்வாய்க்கிழமை பல்வேறு அலுவல் பணிகளுக்காக வந்திருந்த சுமார் 150 நபர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம் அவர்கள் வாகனத்தில் சைடு மிரர் தேவை குறித்தும், இருசக்கர வாகனத்தில் பம்பர் தேவை குறித்தும், நான்கு சக்கர வாகனத்தில் பம்பர்-ன் ஆபத்தை குறித்தும் மற்றும் எல்இடி விளக்குகளின் ஆபத்துகளை குறித்தும் விரிவான விளக்கவுரை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் விழிப்புணர்வின் போது பொதுமக்கள் கேட்கும் சந்தேகங்களுக்கும் வட்டார போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம் விரிவான விளக்கம் அளித்தார்.

நிகழ்வில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

- S. **மோகன்**

# சித்திரை முழு நிலவு மாமல்லபுரத்தில் வன்னியர் சங்க மாநாடு தமிழகத்தின் வளர்ச்சிக்காக




வன்னியர் சங்கத்தின் சார்பில் சென்னை அருகே மாமல்லபுரத்தில் சித்திரை முழு நிலவு வன்னியர் இளைஞர் பெருவிழா மாநாடு நடைபெற்றது. பாமக நிறுவனர் ராமதாஸ், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழ்நாடு அரசு சார்பில் சாதிவாரி சர்வே, வன்னியர்களுக்கு உடனடியாக உள் ஒதுக்கீடு, பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த மத்திய அரசுக்கு பாராட்டு உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முழு நிலவு அன்று மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் சார்பில் வன்னியர் இளைஞர் பெருவிழா மாநாடு நடைபெறுவது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக இந்த மாநாடு நடைபெறாத நிலையில் 12 ஆண்டுகளுக்கு பிறகு பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் ஏற்பாட்டின் பேரில் மாமல்லபுரத்தை அடுத்த கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள திருவிடந்தை பகுதியில் 100 ஏக்கர் பரப்பளவில் மாநாட்டு திடல் மிக பிரமாண்டமாக தயார் செய்யப்பட்டு 11-05-2025 அன்று பிரம்மாண்டமாக நடைபெற்றது.

பாமக நிறுவனர் ராமதாஸ் முன்னிலையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 15 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் பங்கேற்றதாக கூறுகின்றனர் பாமகவினர். இதுவரை இல்லாத அளவு ட்ரோன் ஷோ, பாராகிளைடரில் வன்னியர் சங்க கொடி. கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெற்றது.

தலைவர்கள் அமரும் மேடைக்கு எதிரே அனைத்து பகுதிகளிலும் நிகழ்ச்சியை காண 3 இடங்களில் ராட்சத எல்.இ.டி. திரை வைக்கப்பட்டுள்ளது. அதேபோல, 40-க்கு 20 உயரத்தில் 25-க்கும் மேற்பட்ட இடங்களில் எல்.இ.டி. திரைகள் அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டு திடலில் வன்னியர் சங்கம் உருவானது முதல் தற்போது வரையிலான வரலாற்று தொகுப்பு புகைப்பட காட்சிகளும் இடம் பெற்றுள்ளது. மாலை 4 மணிக்கு மாநாடு தொடங்கிய நிலையில், புஷ்பவனம் குப்புசாமியின் இசை நிகழ்ச்சி, நாட்டுப்புற கலைநிகழ்ச்சி உள்ளிட்டவைகள் நடைபெற்று வருகிறது.

அதைத்தொடர்ந்து, வன்னிய வள்ளல்கள் தியாகிகள் என்ற குறும்படமும் ஒளிபரப்பப்பட்டது. இதற்கிடையே, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் மேடைக்கு வந்த நிலையில், பாராகிளைடரில் வன்னியர் சங்கக் கொடி பறக்கவிடப்பட்டது. கொடி பறந்ததை கண்டு, ஏராளமான தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர். மேலும்,

மாநாட்டுக் கொடியை அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் ஏற்றி வைத்தார்.

மாநாட்டுக்கு வரும் தொண்டர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவக் குழுக்கள் மற்றும் 15 ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டிற்கு வருபவர்கள் வாகனம் பழுதானால் சரி செய்ய ஐந்து இடங்களில் தற்காலிக வாகன சரிபார்ப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.



பெஹல்காம் பயங்கரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த 26 பேருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து, வன்னியர் சங்க கொடியை டாக்டர் ராமதாஸ் ஏற்றி வைத்தார். பின்னர், டாக்டர் ராமதாஸ் குறித்த வரலாற்று குறும்படமும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

**தொடர்ந்து மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அதன் விபரம்..**

**1. தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க மாநில அரசின் சார்பில் தனியாக சாதிவாரி சர்வே நடத்தப்பட வேண்டும்!**

இந்தியாவில் 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் போதிலும், தமிழ்நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள 69% இடஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்கும், மிகமிக பின்தங்கிய நிலையில் உள்ள சமூகங்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவதற்கும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தரவுகள் போதுமானவையாக இருக்காது என்பதே உண்மை.

தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீட்டை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் 13.07.2010ஆம் நாள் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், சாதிவாரி மக்கள்தொகை, சமூகங்களின் பின்தங்கிய நிலை உள்ளிட்ட தரவுகளை ஓராண்டுக்குள் திரட்டி, அவற்றின் அடிப்படையில் இடஒதுக்கீட்டின் அளவை தீர்மானிக்க வேண்டும் என்று ஆணையிட்டிருந்தது. அதேபோல், வன்னியர்களுக்கு 10.5% இடஒதுக்கீடு தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், அவர்களின் சமூக, கல்வி பின்தங்கிய நிலை குறித்த பொருத்தமான, நிகழ்கால தரவுகளைத் திரட்டி அதன் அடிப்படையில் உள்இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டது. தேசிய அளவில் நடத்தப்படும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் இவ்விவரங்களைத் திரட்ட முடியாது.

இந்தியாவில் வரலாற்று ரீதியாகப் பார்த்தால் மக்களின் சமூகப் பின்தங்கிய நிலை குறித்த தரவுகள் காகா கலேல்கர் ஆணையம், மண்டல் ஆணையம், தமிழ்நாட்டில் சட்டநாதன் ஆணையம், அம்பாசங்கர் ஆணையம் போன்ற பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களின் வாயிலாகவே திரட்டிப்பட்டிருக்கின்றன. மக்களின் சமூகப் பின்தங்கிய நிலையை அறிய பல்வேறு வினாக்களை எழுப்பி அவற்றுக்கு விடைபெற வேண்டும். சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பில் மக்களின் சாதி குறித்த தகவல் மட்டுமே கூடுதலாகக் கிடைக்கும். மீதமுள்ள தரவுகளை தனியாக கணக்கெடுப்பதன் வாயிலாக மட்டுமே திரட்ட முடியும் என்பதே எதார்த்தம்.

அதனால்தான், பீகார், தெலுங்கானா, கர்நாடகம், ஒடிசா போன்ற மாநிலங்கள் 2008ஆம் ஆண்டின் புள்ளியியல் சட்டத்தைப் பயன்படுத்தி சாதிவாரியாக சமூக, பொருளாதார பின்தங்கிய நிலை குறித்த தரவுகளைத் திரட்டியுள்ளன. தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீட்டுக்கு எதிராக புதிதாக தொடரப்பட்டுள்ள வழக்கு எந்தநேரமும் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரக்கூடும் என்பதால், அதைப் பாதுகாக்கவும் தனியான கணக்கெடுப்பு மிகவும் தேவையாகும்.

எனவே, தமிழ்நாட்டு மக்களுக்கு உண்மையான சமூகநீதியை வென்றெடுக்கவும், 69% இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கவும், 2008ஆம் ஆண்டு புள்ளியியல் சட்டத்தின்படி, தமிழ்நாட்டில் சமூக, பொருளாதார சாதிவாரி சர்வேயை தமிழக அரசு நடத்த வேண்டும் என இம்மாநாடு கோருகிறது.



**2. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு: போராடி சாதித்த மருத்துவர் அய்யா அவர்களுக்கு நன்றியும், பாராட்டுகளும்!**

இந்தியாவில் அடுத்து நடைபெறவுள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பு சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்தப்படும் என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா விடுதலையடைந்த பின் முதன் முறையாக, கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகு சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த ஆணையிட்டிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு நன்றி தெரிவிக்கிறது.

இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக மருத்துவர் அய்யா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும், போராட்டங்களும் எண்ணில் அடங்காதவை. 20.07.1980ஆம் நாள் வன்னியர் சங்கம் தொடங்கப்பட்ட போது, அதில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானமே சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் அனைத்துச் சமூகங்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதுதான். அதன்பின் தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கான 3 வாய்ப்புகளை மருத்துவர் அய்யா அவர்கள் ஏற்படுத்தினார். ஆனால், தமிழக ஆட்சியாளர்களின் அலட்சியத்தால் அந்த வாய்ப்புகள் வீணடிக்கப்பட்டன.

அதேபோல், தேசிய அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக ராஜீவ் காந்தி, வி.பி.சிங், வாஜ்பாய், மன்மோகன் சிங், நரேந்திர மோடி ஆகிய 5 பிரதமர்களிடம் மருத்துவர் அய்யா அவர்கள் பலமுறை கோரிக்கை விடுத்தார். வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த அரசாணை பிறப்பிக்கப்படுவதாக இருந்தது. ஆனால், குஜராத் நிலநடுக்கம் காரணமாக அந்த வாய்ப்பு சாத்தியமாகவில்லை. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஒப்புக் கொண்டது. ஆனால், பின்னாளில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பதிலாக, சமூகப் பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டதால் மக்களுக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது.

அதன்பின், 2021ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி இன்றைய பிரதமர் நரேந்திர மோடி அவர்களை மருத்துவர் அய்யா அவர்கள் ஒருமுறை நேரில் சந்தித்தும், 3 முறை கடிதங்களை எழுதியும் வலியுறுத்தினார். அதன்



காரணமாகவே இந்தியாவில் சாதிவாரி மக்கள்தொகை கண்கெடுப்பு என்ற மருத்துவர் அய்யாவின் 45 ஆண்டுகால கனவு நனவாகியிருக்கிறது.

சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் மூலம் இந்தியாவில் இடஒதுக்கீட்டின் அளவு அதிகரிக்கப்படுவது உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் ஏற்படும். சில பத்தாண்டுகளுக்கு முன் இவையெல்லாம் சாத்தியமே இல்லை என்று கருதப்பட்ட நிலையில், தொடர் போராட்டங்கள், அரசியல் அழுத்தங்கள் ஆகியற்றின் மூலம் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை சாத்தியம் ஆக்கிய மருத்துவர் அய்யா அவர்களுக்கு இந்த சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு அதன் உளமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

**3. உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு உடனடியாக உள்இடஒதுக்கீடு வழங்கவேண்டும்!**

வன்னியர்களின் சமூக பின்தங்கிய நிலை குறித்த தரவுகளைத் திரட்டி, அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து இன்றுடன் 1,136 நாட்கள் ஆகும் நிலையில், வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க மறுக்கும் தமிழக அரசுக்கு வன்னிய இளைஞர் பெருவிழா கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மருத்துவர் அய்யா அவர்கள் ஒருமுறை நேரில் சந்தித்து வலியுறுத்தியதுடன், 10க்கும் மேற்பட்ட முறை கடிதங்களை எழுதினார். சிலமுறை தொலைபேசி வாயிலாகவும் கோரிக்கை விடுத்தார். அதேபோல், மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் தலைமையிலான குழுவினர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 3 முறை சந்தித்து வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தினர். இவர்கள் தவிர, பா.ம.க. நிர்வாகிகள் அடங்கிய குழுவினர் 50க்கும் மேற்பட்ட முறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து, இதே கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர்.

ஆனால், தொடக்கத்தில் வன்னியர்களுக்கு கண்டிப்பாக உள்இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று உறுதியளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பின்னாளில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டால் மட்டுமே வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார். தமிழக அரசு நேரடியாகவோ அல்லது தமிழ்நாடு மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் வாயிலாகவோ சாதிவாரி சர்வே நடத்த முடியும் என்றாலும் கூட, அதைச் செய்து அதைச் செய்ய தமிழக அரசு மறுப்பது, வன்னியர்களுக்கு சமூகநீதி வழங்குவதில் இன்றைய அரசுக்கு விருப்பமோ, அக்கறையோ இல்லை என்பதையே காட்டுகிறது.

வன்னியர்களின் சமூகப் பிந்தங்கிய நிலை குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் பணி மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு 12.01.2023ஆம்

நாள் வழங்கப்பட்டது. ஆணையம் நினைத்திருந்தால் 3 மாதங்களில் இந்தப் பணியை நிறைவு செய்திருக்க முடியும். ஆனால், இரண்டரை ஆண்டுகள் ஆகியும் தமிழ்நாடு மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இது குறித்த எந்தப் பணியையும் செய்யாமல் உறங்கிக் கொண்டிருக்கிறது. இது பெரும் துரோகம்.

வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க எந்தத் தடையும் இல்லாத நிலையில், சமூகநீதி சார்ந்த தனது கடமையை தமிழக அரசு இனியும் தட்டிக் கழிக்கக் கூடாது. உரிய தரவுகளை உடனடியாகத் திரட்டி, வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா வலியுறுத்துகிறது.

**4. அனைத்து சமூகங்களுக்கும் அவர்களின் மக்கள்தொகைக்கு இணையாக இட ஒதுக்கீடு வழக்க தமிழக அரசு முன்வர வேண்டும்!**

முழுமையான சமூகநீதி என்பது அனைத்து சமூகங்களுக்கும் அவரவர் மக்கள்தொகைக்கு இணையான இட ஒதுக்கீட்டை வழங்குவது தான். 1980&ஆம் ஆண்டில் வன்னியர் சங்கத்தைத் தொடங்கிய காலத்திலிருந்து இதைத் தான் மருத்துவர் அய்யா அவர்கள் வலியுறுத்தி வருகிறார். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பல்லா-யிரம் ஆண்டுகளாக இழைக்கப்பட்டு வந்த சமூக அநீதிக்கு பரிகாரம் தேட இது தான் சிறந்த வழியாகும். கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் மக்கள்தொகைக்கு இணையான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டால், அடுத்த சில தலைமுறைகளில் ஏற்றத்தாழ்வுகள் மறைந்து அனைவரும் சமம் என்ற நிலை உருவாகும். அத்தகையதொரு சூழல் உருவாக வேண்டும் என்பது தான் சமூகநீதியாளர்களின் கனவாகும்.

தமிழ்நாட்டில் அனைத்து சமூகங்களுக்கும் அவர்களின் மக்கள்தொகைக்கு இணையான இட ஒதுக்கீடு வழங்க பெரும் தடையாக இருந்தது சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாதது தான். தேசிய அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட இருப்பதன் மூலம் இதற்கான முதல் தடை விலகியுள்ளது. மாநில அளவிலும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டால் பிற முட்டுக்கட்டைகளும் அகற்றப்பட்டு விடும். எனவே, தமிழகத்தில் உடனே சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை விரைவாக மேற்கொண்டு அனைத்து சமூகங்களுக்கும், அவர்களின் மக்கள்தொகைக்கு இணையான இட ஒதுக்கீடு வழக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சித்திரை முழுநிலவு மாநாடு வலியுறுத்துகிறது.

**5. பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் அளவை, அவர்களின் மக்கள்தொகைக்கு மேலும் 2% உயர்த்த வேண்டும்!**

வன்னியர் சங்கம் 1980&ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போது, அதற்கான நிகழ்வில் அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது தீர்மானம் பட்டிலின, பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் அளவை அவர்களின் மக்கள்தொகைக்கு இணையாக அதிகரிக்க வேண்டும் என்பது தான். ஆனாலும், இட ஒதுக்கீட்டிற்கான உச்சவரம்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அது சாத்தியம் ஆகவில்லை. சமூகநிலை மற்றும் கல்வியில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் பட்டியலினச் சகோதரர்கள். அவர்களின் மக்கள்தொகை மட்டும் அதிகரித்துக் கொண்டே செல்லும் நிலையில், இட ஒதுக்கீட்டை மட்டும் அதிகரிக்காமல் அதே நிலையில் வைத்திருப்பது நியாயம் அல்ல. அது பட்டியலின மக்களின் சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்காது.

பட்டியலின மக்கள் முன்னேறாமல் ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னேற முடியாது. அதைக் கருத்தில் கொண்டு பட்டியலின மக்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டின் அளவை இப்போதிருக்கும் 18% என்ற அளவிலிருந்து, 2011&ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 20 விழுக்காடாக தமிழக அரசு உயர்த்தி வழங்க வேண்டும் என்று இந்த மாநாடு கோருகிறது.

**6. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், இடஒதுக்கீட்டுக்கான உச்சவரம்பை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்!**

தேசிய அளவிலும், தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களிலும் கல்வி & வேலைவாய்ப்பில் சாதி அடிப்படையில் 49.5% மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதற்குக் காரணம் 1962ஆம் ஆண்டு பாலாஜி வழக்கிலும், 1992ஆம் ஆண்டு இந்திரா சகானி வழக்கிலும் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், இடஒதுக்கீட்டின் அளவு 50 விழுக்காட்டைத் தாண்டக்கூடாது என்று ஆணையிட்டதுதான். இடஒதுக்கீட்டிற்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஆனாலும், உச்சநீதிமன்றம் இடஒதுக்கீட்டிற்கு வரம்பு நிர்ணயித்ததற்குக் காரணம் இடஒதுக்கீடு

பெறும் சமூகங்களின் உண்மையான மக்கள்தொகை கணக்கெடுக்கப்படாததுதான். இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் மக்கள்தொகை 52 விழுக்காட்டுக்கும் அதிகம் என்றாலும்கூட, உரிய தரவுகள் இல்லாததாலும், உச்சநீதிமன்றத்தால் வரம்பு நிர்ணயிக்கப்பட்டதாலும் மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 27% மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இது பெரும் சமூக அநீதி.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன் தமிழ்நாட்டில் மாநில அளவிலான கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி, மத்திய அரசு நிறுவன வேலைவாய்ப்புகளிலும் 100% இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்ட வரலாறு இருக்கிறது. இந்தியாவில் 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன் முறையாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ள நிலையில், அதில் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் இடஒதுக்கீட்டுப் பிரி-வினரின் மக்கள்தொகையைக் கணக்கிட்டு அதற்கு இணையாக இடஒதுக்கீட்டின் அளவை அதிகரிக்க வேண்டும் என்று மாமல்லபுரம் சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா கோருகிறது.

**7. மத்திய அரசின் ஓபிசி இடஒதுக்கீட்டில் கிரிமிலேயர் முறையை நீக்க வேண்டும்!**

மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்படும் போதிலும், அதை அந்தச் சமூகங்களால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. இதற்குக் காரணம் கிரிமிலேயர் முறைதான். ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்திற்கும் கூடுதலாக உள்ள பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கிரிமிலேயர் எனப்படும் பொருளாதார அடிப்படையில் முன்னேறியவர்களாக கருதப்பட்டு, அவர்களுக்கு இடஒதுக்கீடு மறுக்கப்படுகிறது. கிரிமிலேயர்களுக்கு மறுக்கப்படும் இடங்கள் கிரிமிலேயர் அல்லாத பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கொண்டு நிரப்பப்படவில்லை என்பதும், சில ஆண்டுகளுக்குப் பின் அந்தப் பணியிடங்கள் பொதுப் பிரிவுக்கு மாற்றப்பட்டு, உயர் சாதியினரைக் கொண்டு நிரப்பப்படுகிறது என்பதும் தான் சமூக அநீதியாகும். இதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்திய அரசியலைமைப்புச் சட்டத்தில் கிரிமிலேயர் என்ற கோட்பாடே இல்லை. 1992ஆம் ஆண்டு இந்திரா சகானி வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றத்தால் தான் கிரிமிலேயர் முறை புகுத்தப்பட்டது. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சமூகநீதியை பறிப்பதற்கான கருவியாக கிரிமிலேயர் முறை பயன்படுத்தப்படுவதால், அதை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என்று மாமல்லபுரம் சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு வலியுறுத்துகிறது.

**8. தனியார்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்!**

அரசுத் துறை வேலைவாய்ப்புகள் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துவரும் நிலையில், பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள மக்களின் சமூக முன்னேற்றத்தை உறுதி செய்ய தனியார் துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது. மத்திய அரசுத் துறைகளில் ஆள்குறைப்பு, பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயம் போன்ற காரணங்களால் அரசுத் துறை வேலைவாய்ப்புகள் குறைந்து வருகின்றன. 2001ஆம் ஆண்டில் மத்திய அரசுத் துறைகளில் உள்ள 36.06 லட்சம் பணியிடங்களில் 1.84 பணி-யிடங்கள் மட்டுமே காலியாக இருந்த நிலையில், 2023ஆம் ஆண்டில் காலியிடங்களில் எண்ணிக்கை 9.5 லட்சமாக உயர்ந்துவிட்டது. ஒருபுறம் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவன வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் நிலையில், தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கையும், அவறின் வேலைவாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக பாமகவால் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

தனியார்துறை நிறுவனங்களில் இடஒதுக்கீடு என்ற கோரிக்கையை ஆட்சியாளர்களும், தனியார் நிறுவனங்களும் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டிருக்கும் போதிலும், அதைச் சட்டமாக்க இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இனியும் அதேநிலை தொடர்வது பெரும் சமூக அநீதி என்பதால், அதைத் தவிர்க்கும் வகையில் தனியார்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்படி இம்மாநாடு கோருகிறது.

**9. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் இடஒதுக்கீட்டை கட்டாயமாக்க வேண்டும்!**

இந்தியாவில் கீழமை நீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களில் இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்பட்டு

வரும் நிலையில், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களில் மட்டும் இடஒதுக்கீடு மறுக்கப்படுகிறது. இது ஏற்றுக்கொள்ள முடியாத சமூக அநீதியாகும்.

உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் இடஒதுக்கீடு மறுக்கப்படுவதற்கான காரணம் கொலீஜியம் முறைதான். உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற நீதிபதிகள் போட்டித் தேர்வுகள் மூலம் நியமிக்கப்பட்டால், அதில் இடஒதுக்கீடு கண்டிப்பாக கடைபிடிக்கப்படும். அதே முறையை கொலீஜியம் முறையில் பின்பற்றுவதில் எந்தச் சிக்கலும் இருக்க வாய்ப்பில்லை. உயர்நீதித் துறையில் இடஒதுக்கீடு பின்பற்றப்படாததால், மிகமிக பின்தங்கிய நிலையில் உள்ளவர்களால் உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகளாக உயர முடிவதில்லை. இந்தநிலை மாற்றப்பட வேண்டும்.

மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தின்படி, 2018ஆம் ஆண்டுக்குப் பிறகு உயர்நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில் 454 நீதிபதிகள், அதாவது 75 விழுக்காட்டினர் உயர்சாதியினர் ஆகும். 12 விழுக்காட்டினர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆவர். பட்டியலினத்தவருக்கு 3 விழுக்காடும், பழங்குடியினருக்கு ஒன்றரை விழுக்காடு மட்டுமே பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது. இதேபோல், எந்த காலக்கட்டத்தை எடுத்துக் கொண்டாலும், உச்சநீதிமன்ற நீதிபதிகளில் 90 விழுக்காட்டினர் உயர் சாதியினராகவே உள்ளனர். இந்த நிலையை மாற்றி அனைத்துச் சமூகங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் வகையில், உயர்நீதித்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த இம்மாநாடு கோருகிறது.

### 10. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்!

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை, கிராம ஊராட்சிகளில் 12.16%, ஊராட்சி ஒன்றியங்களில் 15.42%, மாவட்ட ஊராட்சிகளில் 17.25% பிரதிநிதித்துவம் மட்டுமே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கிடைத்திருக்கிறது. கிராமப் பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தாலும், அங்குள்ள பொதுப் பிரிவு சமூகங்களைச் சேர்ந்த பெரும் பணக்காரர்கள் தான் செல்வாக்கு பெற்றவர்களாக உள்ளனர். அதனால், அவர்கள் மிகவும் எளிதாக தேர்வு செய்யப்படுகின்றனர். இது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் இடஒதுக்கீட்டை மறைமுகமாக பறிக்கும் செயலாகும். இந்த சமூக அநீதி அகற்றப்படவேண்டும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் எத்தனை விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறதோ, குறைந்தபட்சம் அதே அளவு விழுக்காடு இடஒதுக்கீட்டை உள்ளாட்சி அமைப்புகளிலும் வழங்க வேண்டும்; அதன் மூலம் தான் உள்ளாட்சி அமைப்புகளை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க முடியும். இதற்காக, கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை உடனடியாக தமிழக அரசு இயற்ற வேண்டும் என்று சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### 11. தமிழ்நாட்டில் அனைத்துச் சமூக மக்களின் வளர்ச்சிக்காக நிதி அதிகாரத்துடன் கூடிய தனித்தனி கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட வேண்டும்!

ஆந்திர மாநிலத்தைப் பின்பற்றி தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள சமுதாயங்களில், 30 ஆயிரத்திற்கும் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட அனைத்துச் சாதிகளுக்கும், தனித்தனியாக கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மருத்துவர் அய்யா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறார். அவ்வாறு கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டால், ஒவ்வொரு கார்ப்பரேஷனுக்கும் தலைவர்களாக அந்தந்தச் சாதிகளைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவார்கள்; ஒவ்வொரு சாதிக்குமான நலத்திட்ட உதவிகள், முதியோர் ஓய்வூதியம், கல்விக்கட்டணம், தொழில் தொடங்கக் கடனுதவி, மருத்துவ உதவிகள் ஆகியவை இந்த கார்ப்பரேஷன்கள் மூலமாக மட்டுமே வழங்கப்படும் என்பன உள்ளிட்ட பயன்கள் கிடைக்கும்.

சமூகங்களின் வளர்ச்சிக்கு இது மிகவும் சிறந்த யோசனை என்பதால், அதை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாட்டில் 30 ஆயிரத்திற்கும் அதிக மக்கள்தொகை கொண்ட அனைத்துச் சமூகங்களுக்கும் தனித்தனி கார்ப்பரேஷன்களை அமைக்க வேண்டும்; 30 ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட சாதிகளை ஒருங்கிணைத்து கார்ப்பரேஷன்கள் உருவாக்கப்படவேண்டும் என்று சித்திரை முழுநிலவு மாநாடு தமிழக அரசை வலியுறுத்துகிறது.

**12. தமிழ்நாட்டில் கல்வி, தனிநபர் வருமானம், மனிதவள குறியீட்டில் பின்தங்கிய நிலையில் உள்ள வடமாவட்டங்களின் முன்னேற்றத்திற்கு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்!**

தமிழ்நாடு முன்னேறிய மாநிலம் என்று ஆட்சியாளர்கள் பெருமைப்பட்டுக் கொண்டாலும்கூட, தமிழகத்தின் பல மாவட்டங்கள் உத்தரப்பிரதேசத்தையும், பீகாரையும்விட பின்தங்கிய நிலையில் தான் உள்ளன. 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், கடைசி 15 இடங்களைப் பிடிக்கும் மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் வட தமிழ்நாட்டில் தான் உள்ளன. தனிநபர் வருமானம், மனிதவளக் குறியீடு ஆகியவற்றிலும் வடமாவட்டங்கள் தான் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்த நிலையை மாற்றுவதற்காக தமிழகத்தின் வடமாவட்டங்களுக்கு மட்டும் சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 371&கே என்ற புதிய பிரிவை சேர்க்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இம்மாநாடு கோருகிறது.

**13. முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவும், போதைப் பொருட்களை ஒழிக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்!**

தமிழ்நாட்டில் நடைபெறும் கொலை, கொள்ளை போன்ற கொடுங்குற்றங்களுக்கும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றங்களுக்கும் முதன்மைக் காரணமாக இருப்பது மது, கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் தான். தமிழ்நாட்டில் போதைப் பொருட்களின் நடமாட்டமும், பயன்பாடும் அதிகரித்து வருவது குறித்தும், அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டியதன் கட்டாயம் குறித்தும் பாமக தொடர்ந்து வலியுறுத்தி வரும்போதிலும் அதன்மீது எந்த நடவடிக்கையும் தமிழக அரசால் எடுக்கப்படவில்லை.

தமிழகத்தின் பல பகுதிகளில் சமூகப் பதற்றங்கள் ஏற்படுவதற்கும், மதுப்பழக்கமும், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பயன்பாடும் தான் காரணமாக உள்ளன. இதேநிலை தொடர்ந்தால், தமிழ்நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாத நிலை உருவாகிவிடும். இதை உணர்ந்து, தமிழக அரசு உடனடியாக விழித்துக் கொண்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து மதுக்கடைகளையும் மூட வேண்டும். அதேபோல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டத்தையும் முற்றிலுமாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்னியர் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா வலியுறுத்துகிறது.

**14. ஜம்மு –காஷ்மீர் பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட சகோதர, சகோதரிகளுக்கு வீர வணக்கம்: பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் பாகிஸ்தானுக்கு எதிராக எதிர்காலத்திலும் இந்தியாவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு!**

ஜம்மு &காஷ்மீர் மாநிலத்தில் பகல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22&ஆம் நாள் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்தியத் தாக்குதலில் 22 சுற்றுலாப் பயணிகள் படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்த சகோதர, சகோதரிகளின் குடும்பங்களுக்கு சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு வீரவணக்கம் செலுத்துகிறது. பகல்காம் பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பிறகு பாகிஸ்தான் தரப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அமைதியையும், இயல்புநிலையையும் ஏற்படுத்துவதற்கு உகந்தவையாக இல்லை; மாறாக, எல்லைப் பகுதியில் பதட்டத்தையும், பயங்கரவாதத்தையும் தூண்டுவதாகவே இருந்தன.

பகல்காம் தாக்குதல்களுக்குப் பிறகு பாகிஸ்தான் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் பொதுமக்கள் 12 பேரும், இந்தியப் படை வீரர்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் மாநாடு வீரவணக்கம் செலுத்துகிறது. பாகிஸ்தானின் பயங்கரவாதச் செயல்கள் எல்லை மீறிக் கொண்டிருந்த நிலையில், இந்தியாவைப் பாதுகாப்பதற்காக மே 6&ஆம் தேதி பாகிஸ்தானில் 9 இடங்களில் செயல்பட்டு வந்த பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியாவின் முப்படைகளும் இணைந்து கொடுத்த பதிலடி மற்றும் அதன்பின் நாட்டைக் காப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே போர்நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. இது நிம்மதியளிக்கிறது.

அதேநேரத்தில், சிந்து நதி ஒப்பந்தம் ரத்து தொடரும், இனிவரும் காலங்களிலும் பாகிஸ்தானின் பயங்கரவாதத்திற்கு எதிரான நிலைப்பாடு தொடரும் என்று மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் நிலைப்பாட்டை இந்த மாநாடு வரவேற்கிறது. நாட்டைக் காப்பதற்காக கடந்த 3 வாரங்களில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கும் சித்திரை முழுநிலவு மாநாடு முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது." ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நன்றி oneindia.com.

**- ந. மதிவாணன்**

# “நான் முதல்வன்” திட்டத்தினால் நல்ல பலன்!

## சிவில் சர்வீசஸ் தேர்வில் வெற்றி பெற்றுள்ளவர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 26.04.2025 அன்று சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் நடைபெற்ற “நான் முதல்வன்” திட்டம் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமைச் சேர்த்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்களே,

அவர்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கக்கூடிய, உறுதுணையாக இருந்ததுமட்டுமல்ல, இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துபெருமை சேர்த்திருக்கக்கூடிய இங்கே பெருமையோடு அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்களுடைய பெற்றோர்களே,

UPSC தேர்வில் வெற்றி பெற்றுள்ள உங்கள் எல்லோரையும் நான் முதலில் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள்எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துகளை மகிழ்ச்சியோடுதெரி-வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாணவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சிபொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் கல்வியை மேம்படுத்த வேண்டும். மாணவர்களுடையவாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டோம். பள்ளிக்கல்வி - கல்லூரிக் கல்வியைக் கடந்து, மாணவர்களுடைய திறனை மேம்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் எல்லாம் நினைத்தோம். அதிலும் குறிப்பாக, வளர்ந்து வரக்கூடிய தொழில்நுட்பம் - அந்த வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற மாதிரி, நம்முடைய மாணவர்களுடைய ‘Skills’ வளரவேண்டும். எப்படிப்பட்ட போட்டித் தேர்வாக இருந்தாலும், அதை ‘Crack’ செய்கின்ற அளவுக்கு நம்முடைய மாணவர்களுக்குப் பயிற்சி கிடைக்கவேண்டும்; அதையும் நம்முடைய அரசே செய்யவேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்தோம்.

**எனது பிறந்தநாளில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டத்தில் நல்ல பலன்!**

இந்தத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களும் - இளைஞர்களும் நிச்சயமாக தங்களுடைய இலட்சியங்களை அடையவேண்டும்; வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டும்; வளர்ந்து வரவேண்டும்;

என்பதற்காகத் தான் 'நான் முதல்வன்' என்று பெருமைப்படக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தை 'நான் முதல்வன்' என்கின்ற அந்த அடிப்படை-யில்தான் இதை உருவாக்கி இருக்கிறோம்.

'நான் முதல்வன்' என்கின்ற தன்னம்பிக்கை ஊட்டுகின்ற பெயர் வைத்து, 2022-ஆம் ஆண்டில் என்னுடைய பிறந்தநாள் அன்று தான் தொடங்கி வைத்தேன். உங்கள் மீதும், இந்தத் திட்டத்தின் மீதும் நாங்கள்வைத்த நம்பிக்கை பலனளித்திருக்கிறது என்ற செய்தியைப் பார்க்கின்றபோது மகிழ்ச்சியோடும், பெருமையோடும், நீங்கள் எல்லாம் எப்படி ஒரு பூரிப்புடனும், புளகாங்கித உணர்வுடனும் கலந்துகொண்டிருக்கிறீர்களோ, அதேபோலத் தான்நாங்களும் இந்த நிகழ்ச்சியில் மகிழ்ச்சியாக கலந்து கொள்ள வந்திருக்கிறோம்.

சாமானிய வீடுகளில், பிறந்து சாதனையாளர்களாக நாளைய வரலாற்றை எழுதக் கூடியவர்களாக வளர்ந்திருக்கின்றீர்கள். உங்களைப் பாராட்டுவது, திராவிட இயக்கத்தின் வழிவந்திருக்கக்கூடிய எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது!

### கல்விதான் நமக்கான ஆயுதம்!

கல்விதான் நமக்கான ஆயுதம்! எந்த இடர் வந்தாலும், கல்வியை மட்டும் நாம் விட்டுவிடக் கூடாது! அதனால்தான், "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதைத் தொடர்ந்து"புதுமைப்பெண்" திட்டம், "தமிழ்ப்புதல்வன்" திட்டம், "கல்லூரிக் கனவு" திட்டம், "சிகரம் தொடு" திட்டம், "உயர்வுக்குப் படி" திட்டம்என்று ஏராளமான திட்டங்களைத் தொடங்கி,கல்வியைக் கொடுத்து, "நான் முதல்வன்" போன்ற திட்டங்களால் "Upskill" செய்து, பெரிய பெரிய நிறுவனங்களில் நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் "Placement" ஆனதைப்பார்க்கின்றபோது நாம் பூரிப்பு அடைகிறோம்.

தமிழ்நாட்டிற்கு என்று ஒரு 'அறிவுமுகம்' இருக்கிறது! ஒரு ஐ.ஏ.எஸ் - ஒரு ஐ.பி.எஸ் தமிழ்நாட்டு கேடராக இருந்தால், அவர்களுக்கான மதிப்பே தனி! அதுவும் அவர்கள் தமிழ்நாட்டுக்காரர்களாக இருந்தால், இன்னும் மதிப்பு கூடுதலாகிவிடும்! ஆனால்,கடந்த சில ஆண்டுகளாக UPSC தேர்வுகளில்நம்முடைய இளைஞர்கள் தேர்வாவது குறைந்துவிட்டது. ஆனால், இன்றைக்கு அந்தக் கவலையை நீங்கள் நீக்கிவிட்டீர்கள். குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாரான உங்களுக்கு, நம்முடைய அரசு எப்படியெல்லாம் பயிற்சி கொடுத்தது - ஊக்கம் கொடுத்தது - உங்களுடைய சுமைகளைக் குறைக்கஊக்கத்தொகை எல்லாம் கொடுத்தது என, உங்களில் பலரும் ஊடகங்களுக்குக் கொடுத்த பேட்டிகளில் எல்லாம் அதனைச் சொல்லியிருக்கிறீர்கள். அதையெல்லாம் நாங்கள் பார்த்தோம். இதுவே, இன்னும் பல பேரை ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ்-ஆக 'Motivate' செய்யவேண்டும்!

### அதிகாரம் என்பது சமூகத்திற்கு உதவிட வேண்டும்!

மற்றவர்களுக்கு உதவுவதற்கான உங்கள் பணியை, நீங்கள் தேர்வான அன்றைக்கே தொடங்கிவிட்டீர்கள். அதிகாரம் என்பது இந்தச் சமூகத்துக்கும் - சக மனிதர்களுக்கும் - எளியோர்களுக்கும் உதவுவதாக - அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்குப் பயன்படுவதாக அமையவேண்டும்.

இன்றைக்கு அதிகாரம் உங்கள் கைகளை நோக்கி வர இருக்கிறது. அதை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உங்களுக்கு "Roll Model" -ஆகபல பேர் இருப்பார்கள். இனிமேல் நீங்கள் பல பேருக்கு ஸிஷீறீ விஷீபீமீறீ ஆகவேண்டும் - அதுதான் என்னுடைய விருப்பம். இன்றைக்குத் தேர்வாகி இருக்கின்ற நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதன் மூலமாக தான் அந்த நிலையை அடையமுடியும்.

### ஏழை, எளிய மக்களின் உயர்வுக்காகப் பணியாற்றுங்கள்!

என்னுடைய பொதுவாழ்க்கை அனுபவத்தில் இருந்து இதைச் சொல்கிறேன். முதலில் மக்களுடைய மனதில் இடம் பெறவேண்டும். சமூகநீதி - நேர்மை - துணிவு ஆகியவற்றை மனதில் வைத்துக் கொண்டு, ஏழை எளிய மக்களுடைய உயர்வுக்காகப் பாடுபடுங்கள். இந்த மூன்றையும் மனதில் வைத்துக் கொண்டு பணியாற்றினால், மக்கள் நிச்சயமாக நம்மை மறக்கமாட்டார்கள்.

### சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்" என்றுவள்ளுவர் சொன்ன மகிழ்ச்சியை, இப்போதுநீங்கள் உங்கள் பெற்றோருக்குக் கொடுத் திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், புறநானூறில் சொன்ன "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சியை எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அடுத்த முறை உங்களைச் சந்தித்தாலும், உங்களுடைய பணிகளையும், சாதனை களையும் சொல்லி வாழ்த்தவேண்டும்; அதுதான் என்னுடைய ஆசை. எனக்கு அந்த நம்பிக்கை உங்கள் முகங்களைப் பார்க்கும்போது நிச்சயமாக வருகிறது.

உங்களை மீண்டும் வாழ்த்தி, என் உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க! வளர்க!

இவ்வாறு முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

- R. **ஹரிகிருஷ்ணன்**

# மனித குலமே கூட அழியும்! ஆபத்தாக உருவெடுக்கும் AI!



ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு இப்போது உலகெங்கும் வேகமாக வளர்ந்து வருகிறது. இதன் மூலம் நமக்கு மிக பெரிய நன்மைகள் இருந்தாலும் கூட இது பல சூழல்களில் நமக்கு ஆபத்தை ஏற்படுத்தவும் வாய்ப்பு இருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். இன்னும் 5 ஆண்டுகளில் ஏஐ என்பது மனிதர்களுக்கு இணையாக மாறும் என்றும் அப்போது மனித குலத்தையே அழிக்கும் ஆபத்து இருப்பதாகவும் இப்போது ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இப்போது உலகில் எங்கு பார்த்தாலும் ஏஐ தான் இருக்கிறது. சாட்ஜிபிடி தொடங்கி வைத்த இந்த ஏஐ டிரெண்ட் உலகெங்கும் பரவி வருகிறது. உலகின் பல்வேறு டாப் நிறுவனங்களும் கூட ஏஐ மீதான ஆய்வுகளை தீவிரப்படுத்தி வருகிறார்கள். இதற்கிடையே செயற்கை நுண்ணறிவு தொடர்பாக இப்போது அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவு ஒன்று வெளியாகியுள்ளது.

அதாவது செயற்கை நுண்ணறிவு என்பது இன்னும் 5 ஆண்டுகளில், அதாவது 2030ல் மனிதருக்கு இணையான அறிவை பெற்றதாக உருவெடுக்கும்

என வல்லுர்கள் எச்சரித்துள்ளனர். மேலும், இது மனிதகுலத்தை நிரந்தரமாக அழிக்கக்கூடும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். கூகிள் டீப் மைண்ட் தளத்தில் இது குறித்த ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளது.

அதில் மேலும், "ஏஐ என்பது மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. அது வரும் காலத்தில் மிக பெரிய அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.. மனிதகுலத்தை நிரந்தரமாக அழிக்கும் ஆபத்தும் கூட இருக்கிறது. அதேநேரம் ஏஐ மூலம் ஏற்படும் மாற்றங்கள் மனித குலத்திற்கு ஆபத்தானதா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது நாங்கள் இல்லை. சமூகமே அதன் பாதிப்புகளை தீர்மானிக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனித குலத்திற்கே ஆபத்து**

மனித மனிதகுலத்தின் அழிவுக்கு ஏஐ வழிவகுக்கும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ள போதிலும், ஏஐ என்ன மாதிரியான ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை அவர்கள் விளக்கவில்லை. அதேநேரம் ஏஐ ஏற்படுத்தும் ஆபத்துகளில் இருந்து எப்படி தப்பிக்கலாம் அதன் பாதிப்புகளை எப்படி குறைக்கலாம் என்பது குறித்து மட்டும் விளக்கியுள்ளனர்.

ஏஐ மூலம் ஏற்படும் ஆபத்துகளை ஆய்வாளர்கள் நான்கு வகைகளாகப் பிரித்துள்ளனர். முதலில் ஏஐ மாடல்களை தவறாகப் பயன்படுத்துதல் (misuse), தவறான பயன்பாடு (misalignment), ஏஐ செய்யும் தவறுகள் (mistakes) மற்றும் ஏஐ மாடல்களில் உள்ள அபாயங்கள் (structural risks). ஏஐ தவறாக பயன்படுத்தப்படுவதை தடுத்து நிறுத்தினாலே அதன் ஆபத்தை பெருமளவு குறைத்துவிடலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**சர்வதேச அமைப்பு தேவை**

முன்னதாக டீம்மைண்ட் சிஇஓ டெமிஸ் ஹசாபிஸ் இது குறித்து கூறுகையில், "ஏஜிஐ என்பது மனிதர்களை விட புத்திசாலியாக மாறும் ஆபத்து இருக்கிறது. அடுத்த 5 அல்லது 10 ஆண்டுகளில் இது நடக்கும் ஆபத்து அதிகமாகவே உள்ளது. உலக நாடுகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிட எப்படி ஐக்கிய நாடுகள் சபை இருக்கிறதோ.. அதேபோல ஏஐ நடவடிக்கைகளை மேற்பார்வையிட ஒரு அமைப்பு தேவை. இதன் மூலம் ஏஐ சார்ந்த ஆய்வுகளை முடிந்தவரை பாதுகாப்பாக மாற்ற முடியும். பாதுகாப்பற்ற திட்டங்களைக் கண்காணிக்கவும், அவற்றைக் கையாளவும் இந்த அமைப்பு தேவை என்றார்.

ஆய்வாளர்கள் ஏஐ மாடலின் அட்வான்ஸ்டு வெர்ஷனாக அறியப்படும் AGI- Artificial General Intelligence குறித்தே இந்த எச்சரிக்கையை கொடுத்துள்ளனர். ஏஐ என்பது பொதுவாக நாம் கொடுக்கும் டாஸ்குகளை மட்டும் செய்யும். ஆனால் ஏஜிஐ என்பது அதையும் தாண்டி வேலை செய்யும். அது நாம் சொல்லி தருவதை மனிதனைப் போலவே புரிந்து கொள்ளும். அதை புதிய புதிய விஷயங்களுக்கும் பயன்படுத்தும்.

- H. காஞ்சன்

# நாட்றம்பள்ளியில் கூடுதல் ஆதார் சேவை மையங்கள் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை






திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் லட்சக்கணக்கான பொதுமக்கள் வசித்து வருகின்றனர். மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனைத்து வகையான உதவிகளைப் பெற முக்கிய அடையாளமாக விளங்கும் ஆதார் அட்டையில் பெயர் திருத்தம் மொபைல் எண் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்காக நாள்தோறும் நாட்றம்பள்ளி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள ஆதார் சேவை மையத்திற்கு நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் மட்டுமே ஒரே ஒரு கவுன்டர் கொண்ட ஆதார் சேவை மையம் இயங்கி வருவதால் அன்றாடம் சேவைக்காக குறிப்பிட்ட எண்ணிக்கையில் கொடுக்கப்படும் டோக்கன் கிடைக்காமல் பலதரப்பட்ட மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் அவலம் தொடர்கிறது.

இன்னும் சில தினங்களில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் தொடங்க இருப்பதால் மாணவர்கள் நலன் கருதி போஸ்ட் ஆஃபீஸ் மற்றும் வங்கிகளில் அரசு கூடுதல் ஆதார் சேவை மையங்களை நாட்றம்பள்ளியில் அமைத்தால் இதுபோன்ற செயற்கையான இன்னல்களுக்கு பொதுமக்கள் ஆளாவதை தடுக்க முடியும் என்பதே இப்பகுதியில் வசிக்கும் பலரின் கோரிக்கையாக உள்ளது.

நாட்றம்பள்ளி தபால் நிலையத்தில் இயங்கி வந்த ஆதார் சேவை போதிய ஊழியர்கள் இல்லாததால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- S. **மோகன்**




# Chandru Law Academy

Gandhi Road, Ambika Street,
(Near David School), Velachery, Chennai - 42.
Tamil Nadu ✆ : 073396 50446



*Conducting*

## COACHING FOR MAGISTRATE / APP / DISTRICT JUDGE EXAMINATIONS

**(All Major and Minor Acts)**

### COURSES

1. District Judge
2. Magistrate / Munsif
3. Assistant Public Prosecutor (APP)
4. All India Bar Examination (AIBE)
5. Common Law Admission Test (CLAT)














**Offline Class / நேரடி வகுப்புகள்**

Morning Batch :
Timings : 10.30 am to 1.30 pm
Separate Batches for
Week Days and
Saturday & Sundays

**Online Class / இணைய வழி வகுப்புகள்**

Evening Batch :
Timings : 5 pm to 8.30 pm
Weekly 4 Days
@ ZOOM APP

**@ VELACHERY**
**Chennai.**

**R. CHANDRASEKARAN**
Advocate
**Chandru Law Academy**
Founder & Director

Note : No fees for specially challenged & Third gender person

For Registration Contact **+91 73396 50446 / 90804 48871**




உலக பத்திரிகை சுதந்திர நாள் -
ஊடகங்களின் சுதந்திரத்தன்மையினை
உறுதிப்படுத்துவது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு

- பேனா குரல் தமிழ் மாத இதழ்



# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண வைபவம்

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம், என்பது ஒரு வருடாந்திர தெய்வீகத் திருமணத் திருவிழாவாகும். இது சித்திரை திருமணத் திருவிழா என்றும் போற்றப்படுகிறது. இந்த திருவிழா, தாய் சக்தி தேவியின் ஒரு வடிவமான மீனாட்சி மற்றும் சிவபெருமானின் ஒரு வடிவமான சுந்தரேஸ்வரருடன் திருமண வைபவம் மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது. கொண்டாட்டங்களின் போது, விஷ்ணுவின் ஒரு வடிவமான அழகரும், கள்ளழகர் கோவில் மதுரையில் கௌரவிக்கப்படுகிறார், மேலும், அவர் மீனாட்சியின் மூத்த சகோதரராகக் கருதப்படுகிறார்.

பண்டைய இதிகாசத்தின்படி, தங்களுக்கு நீண்ட நாட்களாக குழந்தை இல்லாததால், மன்னன் மலையத்வஜ பாண்டியன் மற்றும் அவரது மனைவி காஞ்சனமாலா ஆகியோர் யாகம் நடத்தியபோது, மீனாட்சி சிறு குழந்தையாக யாகசாலையில் காட்சியளித்ததாக கூறப்படுகிறது.

அப்போது, குழந்தை மீனாட்சி, சக்தி தேவியின் அவதாரம் என்றும், சிவபெருமானே சரியான தருணத்தில் அவளை திருமணம் செய்து கொள்ள வருவார் என்றும் வானத்திலிருந்து ஒரு தெய்வீகக்குரல், அரச தம்பதியினருக்குத் தெரிவித்தது. மீனாட்சி அனைத்து வகையான கலைகளிலும் பயிற்சி பெற்றார், மேலும் அவரது தந்தைக்குப் பிறகு பாண்டிய நாட்டின் ராணியாக முடிசூட்டப்பட்டார். தனது திறமையால், அவர் பூமியில் உள்ள மன்னர்களைத் தோற்கடித்தார், இறுதியாக சிவபெருமானை வெல்வதற்காக கைலாய மலைக்குச் சென்றார். மீனாட்சி போர்க்களத்தில் சிவபெருமானை நேருக்கு நேர் சந்தித்தபோது, அவர் மீது காதல் கொண்டார், மேலும் அவர் சக்தியின் அவதாரம் என்பதையும் அறிந்து கொண்டார்.

சிவபெருமான் அன்னை மீனாட்சியிடம் தக்க சமயத்தில் அவளை திருமணம் செய்து கொள்ள மதுரைக்கு வருவதாக உறுதியளித்தார். உரியநேரத்தில் சிவபெருமான், தேவர்கள், பூதகணங்கள், மற்றும் ரிஷிகளுடன் மதுரைக்கு வருகை புரிந்தார். சிவபெருமான் அன்னை மீனாட்சியை மணமுடித்து பாண்டிய நாட்டைத், தனது மனைவி மீனாட்சியுடன் சுந்தர பாண்டியன் என்ற பெயரில் நல்ல முறையில் ஆட்சி செய்தார். இவர்கள் ஆட்சி செய்த காலத்தில் அனைத்து காலங்களிலும் சீராக மழை பெய்தது, பயிர்கள் நன்கு செழித்து விளைந்தது, மற்றும் மதுரை மாநகரம், தெய்வீக தம்பதியினரால் சிறப்பாக ஆளப்பட்டதால், மதுரை மக்கள் எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லாமல் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தனர்.

மீனாட்சி கல்யாணம் என்பது, மதுரையில், அன்னை மீனாட்சி மற்றும் சிவனின் (சுந்தரேஸ்வரர்) காணக்கிடைக்காத ஒரு அற்புதத் திருக்கல்யாண கொண்டாட்டமாகும். மீனாட்சி திருக்கல்யாணத்தன்று, பக்தர்கள் அதிகாலையிலேயே எழுந்து தெய்வீக அன்னையை தரிசனம் செய்ய, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு ஆவலுடன் செல்வது வழக்கம்.

அப்பொன்னாளில், மீனாட்சியையும், சுந்தரேஸ்வரரையும் வழிபட்டு பூஜிக்க வேண்டும். பக்தர்கள் பழங்கள், பூக்கள், மலர் மாலைகள், தேங்காய் மற்றும் பிற பூஜை பொருட்களைக் கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்தவேண்டும். மீனாட்சி, சுந்தரேஸ்வரர் சிலைகள் அழகிய ஆபரணங்களாலும், ஆடைகளாலும் அந்நாளில் அலங்கரிக்கப்படும். மீனாட்சி கல்யாண நாளில், மதுரையில் உள்ள அனைத்து மக்களும், ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம் காணலாம்.

அன்னை மீனாட்சியை மகிமைப்படுத்தும் வகையில், அர்ச்சகர்கள் தெய்வீக மந்திரங்களை உச்சரித்து மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை செய்வார்கள். பூஜை முடிந்ததும், சுந்தரேஸ்வரர், அன்னை மீனாட்சி அம்மன் ஆகியோரின் உற்சவ சிலைகள், தெய்வீக வாகனங்களில் ஏற்றப்பட்டு, வீதிகளில் ஊர்வலம் வலம் வருவார்கள்.

அன்னை மீனாட்சியையும், சுந்தரேஸ்வரரையும் வணங்கி, நம் வாழ்வில் சகலவளங்களையும் பெறுவோம், அந்த புனித வைபவத்தைக் கண்டுகளிக்க, கோடானுக்கோடி கண்கள் இருந்தாலும் நமக்குப் போதாது!

**- சங்கரன்**

# ஆபரேஷன் சிந்தூர்! எல்லாம் சரியே..
# ராணுவத்துடன் நிற்கும் தமிழகம்!
# ஸ்டாலின், எடப்பாடி, அன்புமணி ஆதரவு!

காஷ்மீரின் பஹால்காம் பகுதியில் கடந்த மாதம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் பாகிஸ்தான் நாட்டில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி இருக்கும் நிலையில் இந்தியா முழுவதும் ஆதரவு எழுந்துள்ளது. தமிழகத்திலிருந்து முதலமைச்சர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோர் இந்திய ராணுவத்தின் நடவடிக்கைக்கு துணை நிற்பதாக கூறியுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் சுற்றுலாப் பயணிகளை குறி வைத்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் தாக்குதல் நடத்தி உள்ளது.

ஜெய்ஸ்-இ-முகமது அமைப்பின் நான்கு இலக்குகள், லஷ்கர் - இ - தொய்பாவின் 3 இலக்குகள், ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் இரண்டு தளங்கள் என 9 பயங்கரவாத முகாம்களை குறி வைத்து இந்தியாவில் முப்படைகளும் இணைந்து திடீர் தாக்குதல் நடத்தின.

அதில் தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்ட நிலையில் ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்திய ராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு இந்தியா முழுவதும் ஆதரவு எழுந்துள்ளது. இந்தியாவின் பல்வேறு இடங்களில் தேசிய கொடியுடன் மக்கள் மகிழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பீகார் முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் உள்ளிட்ட பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி, பாமக தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோர் இந்திய ராணுவத்தின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரி-வித்துள்ளதோடு தமிழகம் இராணுவத்தின் பக்கம் நிற்பதாக கூறியுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளி-யிட்டுள்ள எக்ஸ் பதிவில்,"பயங்கரவாதத்திற்கு




எதிரான இந்திய ராணுவத்தின் நடவடிக்கைக்கு தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும். நாட்டிற்காகவும், ராணுவத்திற்காகவும் தமிழ்நாடு என்றும் உறுதியுடன் நிற்கும்" என கூறியுள்ளார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,"பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறிவைத்து, ஆபரேஷன் சிந்தூர் துல்லியமாக செயல்படுத்தியதற்காக இந்திய ஆயுதப்படைகளை நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியின் விழிப்புடன் கூடிய தலைமையின் கீழ் நீதி வழங்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்கமான நடவடிக்கை, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும், நமது குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் நமது தேசத்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது." என கூறியுள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளி-யிட்டுள்ள பதிவில்," நாட்டின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சரியானவையே: மத்திய அரசுக்கு அனைவரும் துணை நிற்போம்! காஷ்மீரில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளின் கட்டமைப்புகளை அழிக்கும் வகையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வந்த 9 பயங்கர முகாம்கள் மீது இந்தியாவின் முப்படைகளும் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளன. நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும் சரியானவை; தேவையானவை. இதில் மத்திய அரசுக்கும், முப்படைகளுக்கும் அனைவரும் துணை நிற்க வேண்டும்" என கூறீயுள்ளார்.

**- துரை.சந்துரு**


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine
Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect
Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

# தமிழ்நாடு தன்னை பெருமைப்படத் தக்கதாக்கியுள்ளது!

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக குறைந்து வருகிறது. இது குழந்தைகளின் நலன் மீதான அரசின் அக்கறையைக் காட்டுகிறது. நாட்டின் வளர்ச்சி குழந்தைகளின் ஆரோக்கியத்துடனும் நேரடித் தொடர்பு கொண்டது. மேலும், தமிழகத்தில் செயல்படுத்தப்படும் குழந்தைகள் நலக் கொள்கைகளும் இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றன.

தமிழக பொது சுகாதாரத் துறை மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அண்மையில் வெளியிட்ட தரவுகளின்படி, 2022-23-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,000 பிறப்புகளுக்கு 10.9 சதவீதமாக இருந்த குழந்தைகள் இறப்பு விகிதம் 2023-24-ஆம் ஆண்டு 8.9 சதவீதமாகக் குறைந்தது. இது கடந்த 2024-25-ஆம் ஆண்டில் 8.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.

குழந்தைகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்தல், தேவையான ஊட்டச்சத்தை உரிய நேரத்தில் வழங்குதல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியதால் தமிழகம் இந்த விகிதக் குறைப்பை எட்ட முடிந்தது. இந்த வெற்றியில் தமிழக அரசின் சமூக நலத் துறைக்கு முக்கியப் பங்கு உள்ளது. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கண்காணித்தல், நோய்த் தடுப்பு நடவடிக்கை உள்ளிட்டவற்றை பொது சுகாதாரத் துறையின் வழிகாட்டுதலுடன் சமூக நலத் துறையும் மேற்கொண்டது.

மருத்துவத் துறை கண்டிருக்கும் வளர்ச்சியால் வயிற்றுப்போக்கு, ஊட்டச்சத்து குறைபாடு போன்றவற்றால் குழந்தைகள் நேரடியாக இறப்பது தற்போது இல்லை என்றாலும், நோய்த்தொற்றுகள், எதிர்பாராத காயங்கள் போன்றவை 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புக்கு முக்கிய காரணிகளாகப் பார்க்கப்படுகின்றன.

நிமோனியா பாதிப்பு, வயிற்றுப்போக்கு ஆகியவை முந்தைய காலங்களில் குழந்தைகள் இறப்புக்கு காரணமாக இருந்த நிலையில், ஓஆர்எஸ் கரைசல் கொடுத்தல், ரோட்டோ வைரஸ் தடுப்பூசியைச் செலுத்தியது போன்றவை காரணமாக வயிற்றுப்போக்கால் ஏற்படும் மரணங்கள் குறைந்தன.



நோய்த்தொற்றுகளில் இருந்து காப்பதற்காக சிறந்த எதிர்ப்புச்சக்தி மருந்துகள், தட்டம்மையைத் தடுக்கும் தடுப்பூசிகள், சுற்றுப்புற சுகாதாரத்தை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளுதல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்றவையும் குழந்தைகளை வயிற்றுப்போக்கு மரணத்திலிருந்து காத்தன.

இந்த விஷயத்தில் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பச்சிளம் குழந்தைகள் நலப் பிரிவுகளுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. எடைக் குறைவு, மூச்சுத் திணறல் உள்ளிட்ட பிரச்னைகளுடன் பிறக்கும் குழந்தைகள் உடனடியாக மேற்கண்ட பிரிவுக்கு மாற்றப்பட்டு மருத்துவர்களின் 24 மணி நேர நேரடிக் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, அந்தக் குழந்தைகளின் ஆரோக்கியம் உறுதி செய்யப்படுகிறது. மேலும், தொடர் மருத்துவக் கண்காணிப்புக்கும் இங்கு அளிக்கும் மருத்துவக் குறிப்புகள் உதவுகின்றன.

குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும் விகிதம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளால் மேம்பட்டிருக்கிறது. இதற்காக கர்ப்பிணிகளுக்கு தேவையான ஊட்டச்சத்து, சரிவிகித உணவு உள்ளிட்டவை குறித்து கிராம சுகாதார செவிலியர்களைக் கொண்டே கண்காணிக்கப்படுகிறது. சத்துக் குறைபாடு உடைய கர்ப்பிணிகளுக்கு, தேவையான ஊட்டச்சத்துக்கான மருந்துகள் போன்றவையும் வழங்கப்படுகின்றன. இதனால், பிரசவத்துக்குப் பிறகு தாய்ப்பால் கொடுப்பதில் தாய்மார்களுக்கு பிரச்னை வராமல் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிறந்த குழந்தைகளுக்கு இயற்கையான எதிர்ப்புச் சக்தியான தாய்ப்பால் ஊட்டப்படுவதும் அந்தக் குழந்தைகளின் சீரான ஆரோக்கியத்துக்கு உதவுகிறது. எனவேதான், 2 வயது வரை குழந்தைகளுக்கு கட்டாயம் தாய்ப்பால் புகட்ட வேண்டும் என்று சுகாதாரத் துறையால் அறிவுறுத்தப்படுகிறது.

தற்போதைய இளம் பெற்றோரிடையே குழந்தைகளுக்கான ஆரோக்கியம் சார்ந்த நடவடிக்கைகள், உடல்நலக் குறைவு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரிடம் ஆலோசனை பெறுதல் போன்றவையும், நோய் ஆரம்பகட்டத்தில் இருக்கும்போதே, அதன் தீவிரத்தைத் தடுப்பதுடன், நோயை முற்றிலும் குணப்படுத்திக் கொள்வதும் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்ததற்கு மற்றொரு காரணம்.

குழந்தைகள் பிறந்ததில் இருந்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அதன் வளர்ச்சியைக் கண்காணிப்பதன் மூலம் சற்று வளர்ச்சி குறைந்த குழந்தைகளுக்கு, அதற்கான காரணத்தை அறிந்து தொடக்கத்திலேயே சரிசெய்து கொள்ளவும் வாய்ப்புள்ளது. மருத்துவர்களின் இந்த அறிவுறுத்தலைக் கடைப்பிடிப்பதாலும் குழந்தையின் ஆரோக்கியம் மேம்படுகிறது. ரத்த சோகை ஏற்படுவது என்பது குழந்தைகளுக்கான பொதுவான பிரச்னை என்றாலும், ஊட்டச்சத்துக் குறைபாடு சரிசெய்யப்பட்டதும் நோய்த் தொற்றுக்கு உள்ளாக மாட்டார்கள்.

குழந்தை பிறந்ததில் இருந்து குறைந்தபட்சம் 6 மாதங்களுக்காவது தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். பின்னர், போதுமான ஊட்டச்சத்தை உரிய காலத்தில் வழங்க வேண்டும். இதற்கு அந்த இளம் தாய்க்கு அவரது குடும்பம், சமூகம், மருத்துவர்கள் உள்ளிட்ட அனைவரின் ஆதரவும் தேவை.

எனவேதான், பாலூட்டும் பெண்களுக்காக கடந்த 2022-ஆம் ஆண்டு "ஊட்டச்சத்தை உறுதிசெய்' என்ற திட்டம் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டது. இதன்மூலம் ஊட்டச்சத்துப் பெட்டகத்தை பாலூட்டும் பெண்களின் வீடுகளுக்கே சென்று வழங்குவதுடன், குழந்தைகளின் நிலையைக் கண்காணிக்கவும் முடிகிறது.

தாய்-சேய் சுகாதாரக் குறியீடுகளில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. இதற்கு தமிழகத்தின் பங்கும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது என்பது பெருமைக்குரியவிஷயமே.

- K. **மாரிதுரை**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 19.5.2025 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 457 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1118 காவலர் குடியிருப்புகள் மற்றும் 211 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை கட்டடத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம். இ.ஆ.ப, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், இ.ஆ.ப, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், இ.கா.ப, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், இ.கா.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

- P. **ஸ்டாலின்**

# பயன்பாடில்லாத கோயில் நிலங்களில் நாட்டு மரக்கன்றுகள்

## தமிழக அரசின் மகிழ்ச்சி தகவல்



மரக்கன்றுகள் நடுவதில் திமுக அரசு தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகிறது.. அத்துடன் மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டு வருவது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை தந்து வருகிறது. இப்படிப்பட்ட சூழலில், மற்றொரு புதிய அதிரடியை தமிழக இந்து சமய அறநிலையத்துறை கையில் எடுத்துள்ளது.. இது தொடர்பான கடிதம் ஒன்றையும் அனைத்து இணை, துணை, உதவி கமிஷனர்களுக்கும் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் முதல்வரும் திமுக முன்னாள் தலைவருமான மறைந்த மு.க கருணாநிதியின் பிறந்தநாளான ஜூன் 3ம் தேதியன்று அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டசபையில் மு.க ஸ்டாலின் 3 வருடங்களுக்கு முன்பு அறிவித்தார்..இதையடுத்து, கடந்த 2022-ல கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை அண்ணாநகரில் மாவட்ட கிழக்கு மாவட்ட சுற்றுச் சூழல் அணி சார்பில் 9999 மரக்கன்றுகள் நடும் நிகழ்வை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைத்தார்..

### தங்க நாணயம் பரிசு

அதாவது, மரக்கன்றுகளை நட்டு முறையாக பராமரித்து வருபவர்களுக்கு, அடுத்த வருடம் கலைஞர் பிறந்த நாளில் தங்க நாணயம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். அந்தவகையில், தமிழகம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் பணிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் முக்கியத்துவம் அளித்து வருகிறார். மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு இதுபோன்ற சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டு வருவது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை தந்து வருகிறது.

இப்படிப்பட்ட சூழலில், 3 ஆண்டுகளில் 10.86 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்று சமீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவையில் பொன்முடி தெரிவித்திருந்தார்.. தமிழ்நாட்டின் பசுமை பரப்பை 33 சதவீதமாக உயர்த்த பசுமை தமிழ்நாடு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் பொன்முடி கூறியிருந்தார்..

### 2 லட்சம் ஏக்கர் கோயில் நிலம்

அதேபோல, சில நாட்களுக்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய சேகர் பாபு,

தமிழகத்தில் 2 லட்சம் ஏக்கர் கோயில் நிலங்கள் வரைபடமாக தயாரிக்கப்படும் என்று இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்து உள்ளது...

ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து கோயில் நிலத்தை மீட்டு வருகிறோம். பிறகு கோயில் நிலங்களை சுற்றி வேலி அமைத்து அதை வாடகைக்கு விடுவதன் மூலம் வருவாய் ஈட்டுகிறோம். மேலும் பல சந்தர்ப்பங்களில், பசுமையை மேம்படுத்துவதற்காக பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியை பயன்படுத்தி காலியாக உள்ள நிலங்களில் மரங்களை நடுகிறோம். இதுவும் கோவில்களுக்கு நிலையான வருமானத்தை தருகிறது" என்று தெரிவித்திருந்தார்.

**பயன்பாடில்லாத நிலங்கள்**

இந்நிலையில், கோவில்களுக்கு சொந்தமான, பயன்பாட்டில் இல்லாத நிலங்களில், பனை, இலுப்பை உள்ளிட்ட நாட்டு மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கும்படி, அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் ஸ்ரீதர், அனைத்து இணை, துணை, உதவி கமிஷனர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.. அந்த கடிதத்தில் உள்ளதாவது:

**1 லட்சம் மரக்கன்றுகள்**

சட்டசபையில் அமைச்சர் சேகர்பாபு அறிவித்ததை நிறைவேற்ற, ஒவ்வொரு இணை கமிஷனரும், தங்கள் மண்டலத்தில், தலா ஒரு லட்சம் நாட்டு வகை மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முதற்கட்டமாக மரக்கன்றுகள் நடுவதற்கான நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்படும் இடம், மரங்கள் வளரக்கூடிய, நீர் வசதி உள்ள இடமாக இருக்க வேண்டும்.

தோட்டக்கலை அல்லது மரங்களை நடுவதில் நிபுணத்துவம் பெற்றவர்களை ஆலோசகராக நியமித்து, மரக்கன்று நடும் பணியை செய்யவேண்டும். சமூக ஆர்வலர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வழியே, அவற்றை மூன்று ஆண்டுகள் பராமரிக்க வேண்டும். பராமரிக்க எந்த நிறுவனமும் முன்வரவில்லை என்றால், மரக்கன்றுகளை நன்கொடையாளர்கள் வழியே பெற்று, கோவில் சார்பில் அவற்றை நட்டு பராமரிக்க வேண்டும்" என்று கடிதத்தில் கூறியுள்ளார்.

- P. கார்த்திகேயன்

## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123



# புலம்பெயரும் பறவைகள் எதிர்கொள்ளும் முக்கிய அச்சுறுத்தல்கள் யாவை!

ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது வெவ்வேறு வகையான இனத்தைச் சேர்ந்த 4000 வகை பறவைகள் தொடர்ந்து புலம்பெயர்ந்து வருகின்றன. அப்போது அவை சந்திக்கும் சவால்களையும் அச்சுறுத்தல்களையும் பற்றி இந்தப் பதிவில் பார்ப்போம்.

**2025ம் ஆண்டிற்கான கருப்பொருள்:**

உலக புலம்பெயரும் பறவைகள் தினம் மே 10 மற்றும் அக்டோபர் 11ஆம் தேதிகளில் கொண்டாடப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் பகிரப்பட்ட இடங்கள், பறவை நட்பு, நகரங்கள் மற்றும் சமூகங்களை உருவாக்குதல். இதன் பொருள் கிராமங்கள் மற்றும் புற நகர்ப் பகுதியில் பறவைகளின் எண்ணிக்கையை ஆதரிக்கும் சூழலை ஊக்குவிப்பதன் மூலம் மனிதர்களுக்கும் புலம்பெயரும் பறவைகளுக்கும் இடையில் ஆரோக்கியமான உறவை ஏற்படுத்துதலாகும்.

**புலம்பெயரும் பறவைகளைப் பற்றிய சில தகவல்கள்:**

அமெரிக்காவில் விஸ்கான்சின் என்ற மாநிலம் புலம்பெயரும் பறவைகளுக்கு மிகவும் பிரபலமான இடமாகும். மே மாதத்தில் ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான பறவைகள் இந்த மாநில எல்லையைக் கடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயரும் பறவைகளில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரத்தில் பறக்கும் பட்டை தலைவாத்து என்ற பறவை. புலம்பெயரும் பறவைகளால் நீண்ட தூரம் பயணிக்க முடியும். சில பறவைகள் 15 ஆயிரம் மைல்களுக்கு மேற்பட்ட தூரத்தை கூட பறந்து கடக்கும்.

இவை எப்படி நீண்ட தூரம் பறப்பதற்கு தங்களைத் தயார் படுத்துகின்றன தெரியுமா? இடம்பெயர்வுக்கு முன்னால் பறவைகள் ஹைப்பர்ஃபேஜியா எனப்படும் ஒரு செயல்முறைக்கு தங்களை உட்படுத்திக் கொள்கின்றன. பறக்கும் போது அவற்றிற்கு ஆற்றல் தேவைப்படுகிறது. அதனால் தங்களது உடலில் கொழுப்பை சேமிக்க அதிகமாக சாப்பிடுகின்றன. தங்கள் உடல் எடையை சில பறவைகள் இரட்டிப்பாக்கிக் கொள்கின்றன. இதனால் அவர்களுடைய தசை நிறை அதிகரித்து உடலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**புலம்பெயரும் பறவைகள் எதிர்கொள்ளும் முக்கிய அச்சுறுத்தல்கள்:**

1. புலம்பெயரும் பறவைகள் தங்கள் வாழ்விட இழப்பு, காலநிலை மாற்றம், மாசுபாடு மற்றும் வேட்டையாடுதல் ஆகிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.

2. நகரங்கள் வழியாக பறவைகள் புலம்பெயரும் போது குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. நகர்ப்புறத்தில் கட்டிடங்கள், கிரேன்கள் கேபிள்கள், மின் இணைப்புகள் மற்றும் காற்றாலைகள் போன்றவை நிறைந்து இருக்கின்றன. இவற்றால் இரவு நேரத்தில் பறவைகளுக்கு உயிரிழப்பு ஏற்படுகிறது. இவற்றில் மோதி பறவைகள் இறக்கின்றன. அமெரிக்காவில் ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான பறவைகள் மரணத்தை எதிர்கொள்கின்றன.

3. இரவில் புலம்பெயரும் பறவைகளை செயற்கை விளக்குகளின் ஒளி திசை திருப்புகிறது மற்றும் ஈர்க்கிறது. இதனால் கவரப்பட்ட பறவைகள் கட்டிடங்களில் மோதி இறக்கின்றன.

4. நகரமயமாக்கப்பட்ட இடங்களில் பறவைகளுக்கான இயற்கை வாழ்விடங்கள் மற்றும் வளங்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. அதனால் பறவைகள் தங்கள் பாதைகளை மாற்றவோ அல்லது பொருத்தமற்ற சூழல்களில் பயணிக்கவோ நேரிடும் போது ஆபத்துகளை எதிர்கொள்கின்றன.

5. நகர்ப்புறங்களில் கொசு போன்ற ஜீவராசிகள் நோய்களை அதிகமாக பரப்புகின்றன. இதனால் பறவைகளும் அந்த நோய்த் தொற்றுக்கு ஆளாக வாய்ப்பிருக்கிறது.

6. மின் இணைப்புகள் மற்றும் மின் உள்கட்ட அமைப்புகள் போன்ற மின்சார தாக்குதலுக்கு பறவைகள் உள்ளாக நேர்கின்றன.

**புலம்பெயரும் பறவைகளுக்கு உதவும் வழிகள்:**


புலம்பெயரும் பறவைகளை பாதுகாக்க மக்கள் தங்களால் முடிந்த அளவு விளக்குகளை அணைத்து வைக்க வேண்டும். பறவைகள் அவற்றால் ஈர்க்கப்படாமல் தங்கள் வழியில் செல்லும். மனிதர்கள் இருக்கும்போது மட்டும் எரியும் விளக்குகள் போன்ற மோஷன் சென்சார்கள் இயக்கப்பட வேண்டும். இதனால் பறவைகளுக்கு ஒளி வெளிப்பாடு குறையும். நீலம், வெள்ளை அல்லது குளிர் நிற விளக்குகளை தவிர்க்கவும். அவை குறைந்த அலை நீளங்களைக் கொண்டதால் பறவைகளைக் குழப்ப வாய்ப்புள்ளது. வீட்டின் உட்புறங்களில் திரைச்சீலைகள் போட்டு ஜன்னலை மூடி விட வேண்டும். இதனால் ஜன்னலில் மோதி பறவைகள் உயிரிழப்பதை தடுக்கலாம்.

- Ba. **சரவணன்**

PROPSERV
Property Related Allied & Legal services

★ REGISTRATION
★ PATTA
★ GIRAMA NATHAM
★ CMDA APPROVAL
★ BUILDING PLAN
★ NAME TRANSFER
★ SETTLEMENT
★ LEGAL HEIR CERTIFICATE
★ CORPORATION TAXES
★ LAND CEILING
★ SLUM BOARD
★ HOUSING BOARD
★ PROPERTY IDENTIFICATION
★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com



# பப்பாளி மருத்துவ பயன்கள்

பப்பாளி தற்போது எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் பழம். மலிவானது. இனிப்பானது. எல்லோரும் அறிந்தது. சத்துக்கள் மிகுந்தது. மஞ்சள், சிவப்பு நிற பழங்களாகவும், சில சமயம் பச்சை கலந்த நிறத்திலும் உள்ளது. வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய பழம் இது. இதிலும் வைட்டமின் ஏ உயிர் சத்து நிறைய இருக்கிறது.

பல் சம்மந்தமான குறைபாட்டிற்கும், சிறுநீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும், பப்பாளி சாப்பிட்டால் போதும். மேலும் நரம்புகள் பலப்படவும், ஆண்மை தன்மை பலப்படவும், ரத்த விருத்தி உண்டாகவும், ஞாபக சக்தியை உண்டு பண்ணவும் பப்பாளி சாப்பிடுங்கள். அடிக்கடி பப்பாளி பழத்தினை உண்டு வருபவர்கள் எவ்வகை நோய்க்கும் ஆளாக நேரிடாது. எந்த வகையான தொற்று நோய் பரவினாலும், அது இவர்களை தாக்காது. பப்பாளி பழத்தில், இயற்கையாகவே விஷக்கிருமிகளை கொல்லும் சங்கதி உள்ளது.

**மருத்துவக் குணங்கள்**

1. பப்பாளி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும்.
2. எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும். பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர, குண்டான உடல் படிப்படியாக மெலியும்.
3. தொடர்ந்து பப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும். பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும்.
4. நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து, தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.
5. பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும்.
6. பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும்.
7. பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும்.
8. பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும்.
9. பப்பாளி இலைகளை அரைத்து கட்டி, மேல் போட்டு வர கட்டி உடையும்.
10. பப்பாளி விதைகளை அரைத்து, தேள் கொட்டிய இடத்தில் பூச வலி, விஷம் இறங்கும்.
11. பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும்.
12. 100 கிராம் பச்சைக் காயான பப்பாளியில் 32 மில்லி கிராமும், நன்றாகப் பழுத்ததில் 68 முதல் 136 மில்லி கிராமும், வைட்டமின் சி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
13. பழுக்காத பச்சைப் பப்பாளித் துண்டுகள் அல்லது சாறை அருந்தினால், குடலிலுள்ள வட்டப்புழுக்கள் வெளியேறும்.
14. கல்லீரல் கோளாறுகளுக்கும் பப்பாளி மருத்துவரீ-தியாக உதவி செய்யும்.
15. முறையான மாதவிலக்கு ஒழுங்குக்கு பப்பாளி உண்பது சரியான வழி.
16. அடிவயிற்றுப் பிரச்னைகளுக்கு பப்பாளியே மிகச் சிறந்த மருந்து.
17. வயிற்றுக் கடுப்பு, செரிமானமின்மை, அமிலத்தொல்லை, மலச்சிக்கல் இவற்றுக்கெல்லாம் அருமருந்து பப்பாளி.
18. முகப்பரு உள்ளவர்கள், பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக முகத்தில் தேய்க்க வேண்டும்.
19. இது முகப்பருக்களைப் போக்கி, முகச் சுருக்கங்களையும் நீக்கி, பொலிவு கூட்டும் பப்பாளிப்பழம் விலை குறைவு ஆனால் அது தரும் பயன்களோ ஏராளம்.
20. பப்பாளிப் பழத்தை தேனில் கலந்து சாப்பிட்டால் நரம்பு தளர்ச்சி குணமாகும்.

- A. சரவணன்



சித்திரை முழு நிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு
மே 11, 2025 மாமல்லபுரம்
இனமே எழு
உரிமை பெறு
195வது வட்டம், மேட்டுக்குப்பம்
சோழிங்கநல்லூர் மத்திய பகுதி
பாட்டாளி மக்கள் கட்சி
வீ. அய்யனார்
இளைஞர் அணி செயலாளர்

**PENA KURAL,** Tamil Monthly - May 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

